பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
VALAMPURI

ஒங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 18 | வியாழக்கிழமை (01-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 133

### பிரதமரின் கடிதத்திற்கு மதிப்பளித்து

# சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றுவர்!

### ...ப்பான் மாநாட்டிலும் கலந்துகொள்ள முடிவு

(லண்டன்)

**...சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்துகொள்வதற்கு ...மிழீழ வி...டுதலைப்புலிகளின் தலைமைப் பீடம் முடிவு செய்திருப் ...தாக ...சய்தி ஏஜென்ஸி மூலம் தகவல் வெளியாகியுள்ளது.**

...அரசுடனான சமாதானப் பேச்சு ...ர்த்தையை தற்காலிகமாக இடை ...றுத்திக் கொள்வதாக விடுதலைப் ...களின் அரசியல் ஆலோசகர் ...ாநிதி அன்ரன் பாலசிங்கம் பிர ...ர் ரணில்விக்கிரமசிங்காவிற்கு ...ந்த மாதம் கடிதமூலம் புலிக... நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார்.

இதனால் அரசியலில் பெரும் பரபரப்பும் சமாதான நடவடிக்கைகள் தோல்வியடையுமா என்ற அச்சமும் ஏற்பட்டது.

இந்நிலையில் மீண்டும் பேச்சுக்கு வருமாறு வலியுறுத்தியும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நம்பிக்கையையும் உறுதிப்பாட்டையும் தெளிவுபடுத்தியும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகளுக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பிரமதமரின் கடிதம் குறித்து ஆராய்ந்த விடுதலைப்புலிகளின்

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அனுமதியுடன் உயர் வலயம் அமைக்க முடியும்

### ஆணைக்குழுவுக்கு படைத்தளபதி பதில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் எந்த சட்ட விதிமுறைகளுக்கமைவாக அதியுயர் பாதுகாப்பு வலயம் படையினரால் அமைக்கப்பட்டது என்பது பற்றி விளக்கமளிக்குமாறுகோரி யாழ். மனித உரிமை ஆணைக்குழு யாழ். படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

குடாநாட்டு மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் குறித்து மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கிய

(10ம் பக்கம் பார்க்க)

## ...ோர்வேத் தரப்பை சந்தித்த பின்னரே ...ன்ரன் பாலசிங்கம் வன்னி வருவார்

(லண்டன்)

...தமிழீழ விடுதலைப்புலிகளின் ...ரசியல் ஆலோசகர் கலாநிதி அன்...ன் பாலசிங்கத்தின் வன்னி விஜயம் ...மதமடையலாம் என்று லண்டன் ...கவல்கள் தெரிவிக்கின்றன.

...சமாதானப் பேச்சுக்களில் இருந்து ...காலிகமாக விலகிக்கொள்வதாக ...கள் அரசிற்கு அனுப்பிவைத்த கடிதத்திற்கு அரசு புலிகளுக்கு பதில் கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

பிர்தமர் ரணில் விக்கிரமசிங்கா அனுப்பியுள்ள இக் கடிதம் குறித்து விடுதலைப்புலிகளின் அதியுயர் பீடம் வன்னியில் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் விரைவில் கூடி ஆராயவுள்ளது.

இவ் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகக் கலந்து ஆலோசித்து முடிவெடுப்பதற்காகவுமே ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வருகைதர திட்டமிட்டுள்ளார்.

எனினும் அவரது விஜயம் தாமதமாகலாம் என்று புலிகளை ஆதாரம்

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒஸ்ரினுடன் நாளை சந்திப்பு

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலெவ்ஷன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட கடல்வலய நடவடிக்கைகள் தொடர்பான இரண்டாவது அறிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சின் கருத்தை அறிந்துகொள்வதற்காகவே இப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இதேவேளை இவ் விடயம் குறித்து விடுதலைப்புலிகளின் கருத்தை அறிந்து கொள்வதற்காக கண்காணிப்புக் குழுத் தலைவர்

(10ம் பக்கம் பார்க்க)

## ...மிழ்ச்செல்வனுக்கு பேணாட் கடிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் ...றைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் ...ல்வனுக்கு அரசின் சமாதான ...லகப் பணிப்பாளர் பேணாட் ...லக கடிதமொன்றை அனுப்பி...தாக சமாதானச் செயலக ...வல்கள் தெரிவிக்கின்றன.

இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள ...ான் உபகுழு குறித்து ஆக்கபூர்...மான நடவடிக்கைகளை எடுக்க ...வண்டியதன் அவசியம் குறித்தே ... கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள...ாக தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மனவளர்ச்சி குன்றிய இளம் பெண்மீது சுன்னாகத்தில் பாலியல் வல்லுறவு!

### சம்பந்தப்பட்டோரை பொதுமக்கள் பிடித்தனர்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம பகுதியில் மனவளர்ச்சி குன்றிய 21வயது இளம் பெண் ஒருவர் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 24-ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

சுன்னாகம் பகுதியில் வாகனம் ஒன்றில் சென்ற வாகனச் சாரதியும் இளைஞன் ஒருவனும் வீதியால் சென்ற மன வளர்ச்சி குன்றிய இளம் பெண்ணை தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றனர். பின்னர், சாரதியின் உதவியுடன் பிரஸ்தாப இளைஞர் மறைவிடம் ஒன்றில் வைத்து அப் பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார்.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அப் பெண் அணிந்திருந்த இரண்டு காப்புக்களையும் அவர்கள் அபகரித்துச் சென்றுள்ள

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மிலிந்த இந்தியா பயணம்

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட நாளை வெள்ளிக்கிழமை இந்தியாவிற்குச் செல்லவுள்ளார்.

அங்கு செல்லும் அமைச்சர் இலங்கையின் சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவு பற்றி இந்திய அரச உயர் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறவுள்ளதுடன், அவர்களிடமிருந்து ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வேத்தூதுவர்கள் ...மிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் அரசியல் ...ப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் ...வனை நோர்வேயின் அரச பிரதி...ளான இலங்கைக்கான தூது ...ஹான்ஸ் பிரட்ரீசர், முன்னாள் ...வர் ஜோன்வெஸ்பேர்க் ஆகிய ...வரும் சந்தித்து பேச்சு நடத்தி...னர்.

...ச் சந்திப்பு நேற்று முற்பகல் ... மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவச் செயலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகள் மற்றும் பேச்சுக்களில் ஏற்பட்டிருக்கின்ற பின்னடைவுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது. (இ)

## தமிழ்த் தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் மேதினம் இன்று

### யாழ். மத்திய கல்லூரியில் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமான மேதினம் இன்று யாழ். குடாநாட்டில் மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் கொண்டாடப்படவுள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள். தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புக்கள் என்பன இணைந்து மேதின நிகழ்வுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளன.

இன்று பிற்பகல் 2மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து ஆரம்பமாகும் பேரணி பருத்தித்துறை வீதி வழியாக யாழ். ஆஸ்பத்திரி வீதியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு வீதி வழியாக யாழ்பாணம்

(10ம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசத்தின் விடிவுக்கும், இயல்பு வாழ்க்கைக்குமென ஒன்று கூடி உழைக்க இந்த "மே" நாளில் உறுதி பூணுவோம்

மாவை. சோ. சேனாதிராசா பா.உ.
தமிழர் விடுதலைக் கூட்டணி/ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

"மே" திங்கள் முதலாம் நாள் அமெரிக்க நாட்டில் தொழிலாள வர்க்கம் பெற்ற வெற்றியை கொண்டாடுகின்ற நாள். "மே"நாள் விழா ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் கொண்டாடப் படுகிறது. தொழிலாள வர்க்கத்தின் வெற்றிவிழா விவசாயிகள் முதல் அனைத்து வர்க்க உழைப்பாளர்களினதும் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்கும், பெற்ற உரிமைகளைப் பாதுகாப்பதறகும் வலிமை சேர்த்து நடத்தபடும் போராட்டமாகவும் கருதப் படுகிறது.

**விடுதலைப்போராட்டம்**

சுதந்திரம் பெற்ற நாடுகளில் உழைப்பாளர்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தும் அதே வேளை விடுதலைக்கு போராடும் மக்களின் நாடுகளில் தங்கள் அரசியல் விடுதலைக்கும் மக்கள் சக்தியை தங்கள் வலிமையை வெளிக்காட்டிடும் போர்க் குரல் வெளிப்படுத்தப்படுகிறது. இலங்கையில் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டமே மேலோங்கி நிற்கிறது. தமிழ்த்தேசிய இனத்தின் ஆட்சி உரிமை பறிக்கப்பட்டு, ஜனநாயகப போராட்டங்கள் ஆயுதமுனையில் மாறிமாறி வந்த அரசுகளால் அடக்கி ஒடுக்கப்பட்டதனால் கடந்த 20 ஆண்டுகளில் ஆயுதப் போராட்டம் மேலோங்கி நின்றது. இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்த்தேசிய விடுதலைப்போரை அடக்கமுடியாத நிலையில் சிங்களப் பேரினவாத அரசுகள் பொருளாதார நிலையிலும் பாரிய தோல்விகளைச் சந்தித்து வந்துள்ளது.

அதனால், தொழிலாளர், உழைப்பாளர் உரிமைப்போராட்டங்கள் ஆயுத முனையில் அடக்கப பட்டது மட்டுமல்ல, உலகின் உலகமயமாக்கல், சந்தைப்பொருளாதாரம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கைகளினாலும் மக்கள் வாழ்க்கைத்தரமும், உழைக்கும் வர்க்கத்தின் நலன்களும் சுரண்டப்பட்டு வருகின்றன. எனவே தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையை மையமாகக் கொண்டு தான் உழைக்கும் மக்களின் உரிமைகளும் நிலைநாட்டப்பட முடியும் என்பது தெளிவாகும்.

**இயல்பு வாழ்க்கை நிராகரிப்பு**

இலங்கையில் பேரினவாத அரசுகளின் தமிழ்த்தேசத்திற்கெதிரான இராணுவ நடவடிக்கைகளினால் தமிழ்த்தேசத்தின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது மட்டுமல்ல தமிழ்த் தேசியஇன மக்களும் குடியிருப்புக்களும் அழிக்கப் பட்டுள்ளன. தமிழ்த்தேச மக்களின் குடியிருப்பு, வேளாண்மை, கடற் பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்கள் என இராணுவத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு ஜனநாயக, மனித, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை நிராகரிக் கப்பட்டுள்ளது. இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் அகதி வாழ்க்கையினால் தமிழ்த் தேசியம் அழிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டில் போர் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வை எட்டுவதற்கும் இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குமான சர்வதேச, உள்ளூர் முயற்சிகள் சமாதானச் சூழலை தோற்றுவித்த பொழுதிலும், பேச்சுவார்த்தை மேசையில் சிங்கள அரசு தரப்பும் - தமிழ் தரப்பும் சமபலம் பேணப்படுவதற்குப் பதிலாக நூற்றுக்கு நூறு வீதம் சிங்கள, பேரினவாத, அரசியல் இலக்குடைய இராணுவம் மேலுங்கட்டியெழுப்பப் படுவதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் ஜனநாயக, ஆயுத பலம் பலவீனப்படுத்தப்படுகிறது.

**வல்லாண்மை நாடுகளின் தலையீடு**

இதனால் அரசியல் தீர்வு பின்தள்ளப்படுகிறது. தென்னிலங்கையில சிங்கள மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக் கொண்டு பொருளாதாரத்துறை, கல்வி, மனித வள மேம்பாடுகளில் முன்னேறவும் தமிழ்த்தேசிய இனம் அனைத்துத்துறையிலும் வீழ்ச்சியடையவும் சூழ்நிலை ஏற்படுகிறது. மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புக்களும் மறுக்கப்படுகின்றன.

இசசூழ்நியைில் வல்லாண்மை நாடுகளின் வரம்பற்ற தலையீடுகள் தமிழ்த்தேசத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விடும் ஐயம் ஏற்படுகிறது.

எனவே தமிழ்த் தேசமக்கள் தமது ஆட்சியுரிமை, தொழிலாளர், விவசாய மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபடவேண்டியது முன்னரைவிட அவசியமாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கான அரசியல் தீர்வை எட்டவும் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்பவும் சர்வதேச அரங்கில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆணை வழங்கியதன் அடிப்படையில இம் மே நாள் விழாவிலும் தமிழ்த் தேசம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஒன்று பட்டு உறுதியுடன் நிற்கிறது என்பதையும், வேண்டுமானால் ஜனநாயக வழிகளிலும் போராட அணிதிரண்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்த அனைவரும் தமிழ்தேசிய இனத்தின் கூட்டு மே நாள் அணிவகுப்பில் பங்கு கொள்ள வேண்டுமென அழைக்கின்றோம்.

# உலகத் தொழிலாளர்களின் உரிமைத்திருநாள் மேதினியோர் போற்றுகின்ற "மே" முதல் நாள்

உலகத்தின் அச்சாணியாய் விளங்கும் தொழிலாளியின் உழைப்பில், வியர்வையில் உதிரத்தில் தான் காடு நாடாகவும், நாடு நகரமாகவும் ஆகின்றது. இந்தத் தொழிலாளிதான் ஒரு காலத்தில் உழைத்து உழைத்து உருக்குலைந்து போய்கிடந்தான். அதேநேரத்தில் சீமான்களும் கோமான்களும், ஆலயதிபதிகளும், பண முதலைகளும் அவன் உழைப்பை சுரண்டி, உல்லாச மாளிகைகளில, சல்லாபப் பேச்சுப் பேசி சுகபோகத்தில் புரண்டு கிடந்தார்கள். இந்தச சுரணடலுக்கு அரசு ஆரத்தி எடுத்தது, மதம் ஆலவட்டம் வீசியது. அரசன் படைபலம் கொண்டு அடக்கினான். மதவாதி பாவபுண்ணியம் பேசி, நரகசொர்க்கம் காட்டி மடக்கினான். ஆனால் ஒரு நாள் குனிந்தவன் நிமிர்ந்தான்

**சிக்காக்கோ நகரில்**

1886ஆம் ஆண்டு "மே" முதல நாளன்று அமெரிக்க சிக்காக்கோ நகரவீதிகளில் ஆறுபேர் தூக்கிவிடப் பட்டனர். ஆயிரத்திற்கும் அதிகமானோர் அடித்து நொருக்கப் பட்டனர். மிதித்து துவைக்கப்பட்டனர். துப்பாக்கிகள் வேறு பேசின. இருந்தும் போராட்டத்தை முறியடிக்க முடியவில்லை. கால வெள்ளத்தில் முதலாளித்துவம் அடிபணிந்தது. தொழிலாளர் வெற்றிபெற்றனர். அந்தநாள் தான் இன்று தொழிலாளிகளின உரிமைக்கு வித்திட்ட அவர்களின் பெருமைக்குக் கட்டியம் கூறும் மே நாளாக போற்றிக் கொண்டாடப்படுகிறது.

மே நாள் சுரண்டி வாழ்வோருககும், சுகபோகிகளுக்கும், உரிமைக் குரலை ஒடுக்கிவிடுவோம், விடுதலை வேட்கையை அடக்கி விடுவோம் என்று ஆர்ப்பரிக்கும் அடக்குமுறையாளர்களுக்கும், மமதை பிடித்த ஆட்சியாளர்களுக் கும் அபாய அறிவிப்புக் கொடுக்கும் நாள். மே நாள் ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ, இனத்திற்கோ உரியதல்ல. அது உலகத்தொழிலாளர் அத்தனைபேருக்கும் சொந்தமான நாள். உலகம் உழைப்பவனுக்கே சொந்தமென்ற உயர்ந்த உண்மையை உணர்த்தும் நாள். எனவே, மே முதல் நாள் உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களால் உரிமையோடு திருநாளாக கொண்டாடப்பட்டு வருகின்றது. தொழிலாளர்கள் எங்கிருந்தாலும் இன, மத மொழி வேறுபாடுகளின்றிச சகோதரத்துவ உணர்வு பூண்டு வாழ்கின்ற தன்மை காணப்படுகின்றது. தொழிலாளர்கள் என்ற கோட்பாடே அவர்களை இப்படி இணைத்து வைத்திருக்கின்றது. உலகத்தில் உள்ள அனைவரும் தொழிலாளரே ஆவார். அறிவினால் தொழில் புரிவோர் ஒரு பிரிவின் கைத்தொழிலாளர், இன்னொரு பிரிவினர்இவ்விரு பிரிவினரும் தொழிலாளரேயாவர். கைததொழிலாளர் துணையின்றி, அறிவுசார் தொழிலாளர்கள் உலகில் வாழ்தல் அரிது என்று கூறலாம். ஆதலால் கைத்தொழிலாளர் நலனில் அறிவுசார் தொழில் புரிவோர் அக்கறை காட்டவேண்டியது அவசியம்.

**தொழிலாளர் இயக்கங்கள்**

தொழிலாளர்கள் பலகாலமாக அடிமைப் பட்டுவாழ்ந்தார்கள். இநத இழி நிலையைப் போக்கவென சிலர் சிந்தித்தனால் தொழிலாளர் இயக்கங்கள் உருவாகின. கொடுமை அடக்குமுறைகளை உடைப்பதற்காக உருவாக்கப் பட்ட இயக்கங்கள் தமககுள்ள பல குறைகளைப் போக்கி சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் இப்போது ஆட்சியைத தமவசப்படுத்தியும், தம்வயப்படுததும் முயற்சியிலும் ஈடுபட்டு ஆக்கம் பெற்றுள்ளார்கள், இநநாளில தொழிலாளர் இயக்கம் இல்லாத நாடே இல்லை எனலாம்.

உலகெங்கும் தொழிற்சங்கங்கள் உருவாகியிருப்பதனால், தொழிலாளர் தனித்தனியே நின்று தம் விருப்பப்படி எவ்விதக் குழப்பங்களையும விளைவியாமல் இருக்கின்றனர். தொழிலாளர் நியாய முறையைக் கடைப்பிடித்துச் சங்கங்கள் வாயிலாகத் தங்கள்குறைகளை முறையிட்டுநலம் பெறவே முயல்கின்றனர். முதலாளிகளும் தொழிலாளர் நிலையை உணர்ந்து ஆவன செய்து வருவராயின் எங்கும் எனறும் அமைதி நிலவும் என்பதில் ஐயமில்லை. தொழிற்சங்கங்கள் வெறும் வேலை நிறுத்தத்திற்காகவே உருவாகினவை அல்ல. வேறு பல நன்மைகளையும் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் முனைப்பாகவுள்ளன. தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சிகளில் நுழையாது இயங்கினால் பல நன்மைகள் விளையும் எனலாம்.

**அரசியல் கட்சிகள்**

தொழிலாளர்களுக்கு அரசியல் ஞானம் ஊட்டப்படவேண்டும். தொழிற் சங்கங்களிடையில் கட்சிகளையும், பகைமைகளையும் கொண்டு வந்து சேர்ப்பது அறிவுடைமையாகாது. நியாய வரப்புக்குட்பட்ட கிளர்ச்சிகளைச் செய்து, உரிமைகளைப் பெறமுயலவேண்டும். முதலில தொழிலாளர்களின் [illegible]மை நிலையைப் போக்க முயல[illegible] டும். தமது உள்ளத்திலுள்ள நான[illegible] அரசியல் கொள்கைகளை அரசியல் கட்சிகள் தொழிலாளருக்கு அறிவுறுத்தி அவர்களைக் கலகக கூடடத்தினராக்குவது நாட்டு நலத்தை நாடுவதாகாது, பொதுவாக நமது நாட்டில் அரசியலே மனிதரைப பற்றிக் கிடக்கிறது. மனிதர் மீதுள்ளபகைமையை அரசியலில் புகுததி, நாட்டுத்தொண்டு செய்வோராவர். தொண்டு செய்யப்புகுவோரிடத்துப பகைமை தலைகாட்டலாகாது. நாம அரசியல் கொள்கைகளில் மாறுபடலாம். கொள்கைகளை மறுக்கலாம். கொள்கை மாறுபாட்டுக்கும் தனிப்பட்ட மனிதர் போக்குக்கும் வேற்றுமை உண்டு. தொழிற்சங்கங்கள் எத்தகையு கட்சி வேற்றுமைகளையும் விலக்கி வாழ்வதே நலமாகும். இதனையே இந்நாளில் உறுதி எடுப்போம்.

மதிவாணன்

***

# ஒன்றுபடுவதன் மூலம் தமிழர் உரிமைகளை வென்றெடுக்கலாம்

சிவாஜிலிங்கம்எம்.பி. மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர்களுடைய உரிமைகளை வலியுறுத்துவதற்காக சர்வதேச தொழிலாளர் தினமான மே தினத்தை இன்று நாங்கள் அனைவரும் கொண்டாடுகின்றோம். உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற அறைகூவலின் கீழ் தமிழ்த் தேசியத் தொழிலாளர்க ளும் அணிதிரள வேண்டிய தேவையுள்ளது.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வெளியிட்டுள்ள மேதினச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய இனத்திற்கு எதிரான இன ஒடுக்கல், இன அழிவு நடவடிக்கைகள் 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப பட்டன. ஆயுதப் போராட்டம் 1983ஆம் ஆண்டுக்குபபின்னர் தீவிரப்படுத்தப்பட்டு இன்று பெரும் தமிழ்ச் சேனையாக மிகப் பெரிய பலத்துடன் தமிழ் தேசத்தின் படையாக எழுந்து நிற்கின்ற காரணத்தினால் சிங்கள அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையல் தமிழ்த் தேசிய இனம் ஒன்றுபட்டுள்ள இச்சூழ்நிலையில் ஒறறுமையை மேலும் பலப்படுத்துவதன் மூலமே தமிழ்த் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமை கண்டு சிங்கள அரசும், சர்வதேச சமூகமும் இன்றைக்கு வியந்து நிற்கின்றது. தமிழர் சேனையின் பலத்தைப் பேணிப் பாதுகாப்பதன்மூலம்தான் தமிழ்த் தேசிய இனத்தின் வெற்றி தங்கியுள்ளது.

ஒரு தேசிய இனம் தனது தலைவிதியை தானே நிர்ணயிப்பது என்ற பிறப்புரிமையின் அடிப்படையில் பாரம்பரிய வாழ்விடமான தமிழீழத தாயகத்தில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தன்னாட்சியைக் கோரி நிற்கின்றது. இந்த உள்ளக சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ள சிங்கள தேசம் மறுக்குமாக இருந்தால், இருந்ததை இழந்ததை மீட்டு சுதந்திரத் தமிழீழ அரசை நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதனை சர்வதேசத்துக்கும் எடுத்துக்காட்ட நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தமிழர் தேசத்தின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த போதிய நடவடிக்கைகளை எடுக்க சிங்கள அரசு தவறி விட்டது.

எமது தமிழ் தேசிய இனத்தின்உணர்வலைகளையும், உள்ளக் குமுறல்களையும சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டுவதற்காக ஆயிரக் கணக்கில் அணிதிரண்டு தமிழ்த் தேசிய இனத்தின கூட்டு மேதின பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு தமிழ்த் தேசிய இனத்தின் உறுதிப்பாட்டை அகில உலகுக்கும் எடுத்துக் காட்ட வேண்டும். அதன் மூலமே தமிழ்த் தொழிலாளர்களின் உரிமை உட்பட தமிழ்த் தேசிய இனத் தின் விடிவு தங்கியுள்ளது என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

# உரிமைக் குரலை உலகறியச் செய்வோம்

ஐக்கிய சோசலிசக் கட்சி

(யாழ்ப்பாணம்)

அன்று, அமெரிக்காவின் சிக்காகோ நகரில் உழைக்கும் வர்க்கம் தன்னுரிமைக்காகப் போராடியது. உதிரம் சிந்தியது. தளையறுத்துத் தலை நிமிர்ந்தது. அன்று முதல் மே தினம என்பது மேதினியில் மேன்மை பெற்றது.

இன்று இம் மே நாளில் உழைக்கும வர்க்கமும் அடக்கப்படும் இனங்களும் ஒடுக்கப்படும் மக்களும் கூட்டிணைந்து தம் உரிமைக்குரலை உலகறியச் செய்து காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

ஐக்கிய சோசலிசக் கட்சி விடுத்துள்ள மே தினச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும், சுதந்திரத்துக்காகப் போராடும் தமிழீழதேசத்தின் அனைத்து மக்களும் அனைத்துக் கட்சிகளும் ஒன்று பட்டு ஓரணியாய்த திரண்டு அடக்கியாள்வோருக்கு அவர்களின் சர்வதேசக் கூட்டாளிகளுக்கும உரத்த குரலில் தமது விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இன்றைய தமிழ்த் தேசிய ஐக்கிய மே நாளில் ஊர்வலத்திலும கூட்டத்திலும் கலந்து கொள்வதை ஒவவொரு தமிழரும் தமது தேசியக் கடமையாகக் கொள்ளவேண்டும்.

தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமைமையின் அடிப்படையில் தமழ்த் தேசியம் அரசியல் தீர்வொன்றை அடையும் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைக்கக் கூடாது என்ற கோஷம் வண்ணதிர முழங் கட்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# கல்விச் சமூக நலன் கருதி திரண்டெழுந்து குரல் கொடுப்போம்

இ.த.ஆ. ச. மேதின அறை கூவல்

(தென்மராட்சி)

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல விடயங்கள் நிறைவேற்றப்பட்டு நிலையான ஒரு வாழ்வு அமையும் என எதிர்பார்த்திருந்த தமிழ் இனம்,இன்று ஏமாற்றப்பட்டு விரக்தியடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள மேதின செய்திக்குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் மேலும்,

குறிப்பாக கல்விப்புலத்தில் உயா பாதுகாப்பு வலயம்,பெருந் தொகையான ஆசிரிய வெற் றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது, பாடப் புத்தகங்கள் காலதாமதமாக கிடைப்பது, பதவி உயர்வுகளில் இன ரீதியான பாதிப்பு,பெருந்தொகையான பாக்கிச் சம்பளம் கிடைக்காமை தேசிய கல்வி நிறுவனம் தட்டமிட்டு தமிழ் மொழி மூல சகல விடயங்களையும் புறக்கணித்து வருவது உள்ளிட்ட பல விடயங்கள் பாரிய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன.

இவற்றை உரத்த குரலில் வெளிப்படுத்த கல்விச் சமூகம் திரண்டெழுந்து மேதினப் பேர ணியிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

யாழ்.குடாநாட்டின் சகல அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து பெரிய அளவில் நடாத்தவிருக்கும் கூட்டு மேதின நிகழ்ச்சியில் சகல அதிபர்கள் .ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், தொண்டர் ஆசிரியர்கள்,பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் ,கல்வித்திணைக்கள ஊழியர்கள் யாவரும் கலந்து எமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்என்றுள்ளது. (உ-77)

# சிறுவர்களைத் தண்டிக்கும் ஆசிரியர்களுக்கு சிறைத் தண்டனை

(கொழும்பு)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ''சிறுவர்களை உடல் ரீதியாக தண்டிக்க தேவையில்லை'' என்பதை அறிவுறுத்தும் கையேடுகள் பாடசாலை ஆசிரியர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளதாக மேற்படி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் கரேந்திர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே கரேந்திர டீ சில்வா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சிறுவர்களை அடித்து உடல் ரீதியாக தண்டிப்பது குறித்து எமக்கு பெருமளவு முறைப்பாடு கிடைத்துள்ளன.

இவ்வாறு உடல் ரீதியாக சிறுவர்களை துன்புறுத்தும் ஆசிரியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பிரகாரம் இவர்களுக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும். இதற்கான சட்ட அதிகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோதமான முறையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல் தொடர்பாக குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவென பொலிஸாருடன் இணைந்து திடீர் தேடுதல்களைத் தாம் நடத்தி வருகிறதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இச்செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்,

இத்தகைய திடீர் சோதனைகளின் போது இத்தகைய துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்ட 650 சிறார்கள் மீட்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். (உ-10)

## அரசசேவை ஆ.கு வுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அரசசேவை ஆணைக்குழுவுக்கு எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தரத்துக்கான பதவி உயர்வு நேர்முகப்பரீட்சைக்கு தோற்றிய 16 பேர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

அம்மனுவில் தாம் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது.

இதனால் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியவர்களின் புள்ளிவிபரங்கள் மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டும் எனவும் அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமது சிரேஷ்ட பதவிக்காலத்தை கருத்திற் கொண்டு தகுந்த பதவிகளுக்கு பதவி வழங்குமாறு உயர்நீதிமன்றம் அரசசேவை ஆணைக்குழுவுக்கு உத்தர விட வேண்டும் எனவும் மனுதாரர்கள் கோரியுள்ளனர். (உ-8)

## சாவல்கட்டு கிராமத்திற்கு வெள்ளநீர் வழிந்தோட வடிகால் அமைக்குமாறு கோரிக்கை

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாவல்கட்டு கிராமத்துக்கு இவ்வாண்டு மழைகாலம் ஏற்படுவதற்கு முன்னதாக வெள்ள நீர் வடிந்தோடக்கூடிய வடிகால்களை அமைக்க வேண்டும்.

இவ்வாறு வலி. தென்மேற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.செல்வராசா, தேசிய நீர்வடிகால் திணைக்களத்தையும் சம்பந்தப்பட்ட பிரதேச சபையையும் அவசர கடித மூலம் கோரியுள்ளார்.

மிகவும் தாழ்வான மேற்படி பகுதியில் வெள்ள நீர் வழிந்தோடும் வழி இன்மையால் கடந்த மாரி காலத்தின்போது அங்கு வெள்ளநீர் வீடுகளுக்குள் புகுந்ததும், இதனால் சுமார் 85 வரையான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பொதுஇடங்களில் தஞ்சம் புகுந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, இப்பகுதியின் நிலை குறித்து அண்மையில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், மற்றும் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் நேரில் அவதானித்துச் சென்றுள்ளனர். (உ-252)

## காணாமல் போன எஜமானியின் சடலத்தைக் காட்டிக் கொடுத்தது நாய்

(கொழும்பு)

மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட பெண்ணின் சடலத்தை அவர் வளர்த்த நாய் காட்டிக் கொடுத்துள்ளது.

பொலநறுவைப் பகுதியில் கடை வைத்திருந்த பெண் ஒருவர் கடந்த 22ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

இந்த நிலையில் குறிப்பிட்ட பெண் வளர்த்த நாய் மேற்படி கடையில் கடமையாற்றி வந்த சிறுவனை காட்டுப்பகுதிக்கு அழைத்துச் சென்று ஓர் இடத்தில் தரித்துள்ளது.

நாய் பலமுறை தொடர்ந்தும் இவ்வாறு செய்ததை அடுத்து பொலிஸாருக்கு இதுபற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் நாய் நின்ற இடத்தை தோண்டிப் பார்த்த போது மேற்படி காணாமல் போன பெண்ணின் சடலம் அங்கு இருந்ததாக பொலநறுவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (உ-8)

## பல்கலைக்கழக வளர்ச்சிக்கு எம்.பிக்களின் உதவி பெறப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குறை நிறைகளை ஆராய்வதற்கும், தேவைகளை இனங்கண்டு அவற்றைப் பெறுவதற்கான முயற்சிகளில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு முன்னோடியாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் தேவைகளை எடுத்துக் கூறவுள்ளதாகவும் துணைவேந்தர் தெரிவித்தார். (வ)

## சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் கழிவுநீர் வாய்க்காலினுள் பாய்ந்தது

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதியால் வேம்படிச் சந்தி நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கழிவுநீர் வாய்க்காலினுள் புகுந்தது.

நேற்று வியாழக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாரதி தெய்வாதீனமாக சிறு காயங்களுடன் தப்பிக் கொண்டார்.

மேற்படி வாகனத்தில் வேறெவரும் இருக்காமையால் உயிர் இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. (உ-451)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 1997,1998,1999 ஆம் கல்வி ஆண்டுகளில் கற்று வெளியேறியவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 9,10,11,12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி பட்டமளிப்பு விழாவிற்கு இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் உடன் தாங்கள் கல்விகற்ற கல்வியியல் கல்லூரிகளின் பீடாதிபதி களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தங்கள் பெயர்களை பதிவு செய்யாத மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களை பெற முடியாது போகலாம் என்பதனை கவனத்தில் கொள்ளுமாறு கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் ஏ.சி.எஸ்.இப்ராஹிம் தெரிவித்துள்ளார். (உ-8)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து நடத்தவுள்ள மேதினப் பேரணியில் யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறும்,

இன்றைய தினம் பி.ப. 1.30 மணிக்கு நல்லூர் பின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பணிமனையில் ஒன்றுகூடுமாறும் தொண்டர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (உ)

## இளம்பெண் மரணம்

(வல்வெட்டித்துறை)

எரிகாயங்களுக்கு உள்ளான இளம்பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி இன்பருட்டிப் பகுதியில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில்,

திருகோணமலையிலிருந்து வந்து உறவினர் வீட்டில் தங்கியிருந்த மனோகரன் கலா (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார். (த-63)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில்-கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம், யாழ். மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 3வது சுற்றில் இன்று பி.ப. 4.45 மணிக்கு மானிப்பாய் ஆனந்தா விளையாட்டுக்கழகமும், சண்டிலிப்பாய் சிவசக்தி விளையாட்டுக்கழகமும் பங்குபற்றுவுள்ளன. (உ-10)

## 87 ச.ச.நிலையங்கள் பதிவு

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலகத் திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட 87 சனசமூக நிலையங்களில் 78 மாத்திரமே நல்ல முறையில் இயங்குவதாக கரவெட்டி பிரதேச செயலக சமூக உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (உ-44)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(நெல்லியடி)

கரவெட்டிப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாகிகள் தெரிவு கடந்த சனியன்று கரவெட்டி பொன்னம்பல வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

கரவெட்டிப் பிரதேச செயலக சமூக உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு கிழக்கு சமூக நல அமைப்பின் இணைப்புப் பிரதிநிதி ஆர்.செந்தூர்ராஜா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சனசமூக நிலையங்கள் இணைந்து மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விளக்கமளித்தார்.

சமாசத்தின் தலைவராக கொ.குணசிங்கம், உபதலைவராக ச.பரமேஸ்வரன், செயலாளராக கி.தர்மகுலசிங்கம், உப செயலாளராக சி.இரத்தினவடிவேல், பொருளாளராக கோ.மாசிலாமணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-44)



சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து யாழ். ஆஸ்பத்திரி வீதி கழிவு வாய்க்காலினுள் புகுந்த மினிபஸ்ஸை படங்களில் காணலாம். படங்கள் : பவன்



சமாந்தரமாகச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களில் ஒரு தொகுதியைப் படங்களில் காண்கிறீர்கள். படம்: பவன்



கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய இளைப்பாறிய கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவனேஸ்வரி தியாகராஜா செல்வன் அங்கீதரனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காண லாம்.
படம்: பரு.நிருபர்




கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகம் நடத்திய சமய அறிவுப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற கிளிநொச்சி புனித திரேசாள் பெண்கள் கல்லூரி மாணவி தி.அர்ச்சனாவுக்கு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆசிரிய ஆலோசகர் திருமதி கே.செல்வராணி சான்றுப்பத்திரத்தையும் பரிசில்களையும் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
படம்: தி.விமலதாஸ்

# சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்த ஆசியான் நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட திட்டம்

## பொது நிதியொன்றும் உருவாக்கப்பட்டது

## சீனா 10 லட்சம் டொலர் வழங்க இணக்கம்

(பேங்கொங்)

சீனாவும் ஆசியான் நாடுகளும் ''சார்ஸ்'' ஆட்கொல்லி நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தமது வளங்களை ஒருங்கிணைத்து செயல்படுவதென்று முடிவு செய்துள்ளன.

பேங்கொங்கில் இடம்பெற்ற ஆஸியான் (தென் ஆஸிய நாடுகளின் சங்கம்) பிரதமர்கள் மகாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆஸியான் நாடுகளிலேயே சார்ஸ் நோய் பெருமளவில் காணப்படுவதாலும் இந்நாடுகளிலிருந்தே சார்ஸ் வேறு நாடுகளுக்குப் பரவும் வாய்ப்பு அதிகரித்திருப்பதாலும் இந்நோயை விரைவாகக் கட்டுப்படுத்துவது குறித்து ஆஸியான் நாடுகளின் பிரதமர்கள் பேங்கொங்கில் கூடினார்கள்.

சார்ஸ் நோய் சீனாவிலேயே முதன் முதல் தோன்றியதாகக் கருதப்படுவதாலும் அங்கேயே ஏராளமானவர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டும் மரணத்துக்குள்ளாகியும் இருப்பதால் இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் சீனா அதிக அக்கறை கொண்டுள்ளது. அதன் காரணமாகவே சீனப்பிரதமர் டென் ஜயாவாவோ இந்த ஆஸியான் மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்.

சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு நிதியை உருவாக்குவதென ஆஸியான் நாடுகளின் பிரதமர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர். இந்நிதிக்கு 10 லட்சம் டொலருக்கும் அதிகமான நிதியுதவி வழங்குவதாக சீனப்பிரதமர் வாக்களித்துள்ளார்.

ஆஸியான் அமைப்பில் தென் கிழக்கு ஆஸியாவிலுள்ள 10 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**சீனாவில் 6 நகரங்கள் தனிமைப்படுத்தப்பட்டன**

சார்ஸ் நோய் அச்சுறுத்தல் காரணமாக பீஜிங் நகரிலுள்ள 6 குடியிருப்பு நகரங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை கனடாவில் ரொரான்டோ நகிற்குவெளி நாட்டவர்கள் பயணம் செய்ய வேண்டாமென விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கையை உலக சுகாதார ஸ்தாபனம் வாபஸ் பெற்றதையடுத்து கனடா மகிழ்ச்சியடைந்துள்ளது.

சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பாகவும் அதற்கான முன் நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் உலக நாடுகள் தொடர்ந்தும் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன.

குறிப்பாக ஆசிய நாடுகளை அச்சுறுத்தும் இந்நோய் காரணமாக கடந்த சில தினங்களாக இந்நாடுகளின் தலைவர்கள் சுகாதார அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். (பி-2)

# குழந்தையின் பெயருக்கு முன் தாயின் பெயர் முதல் எழுத்தைப் பாவிக்கலாம்

## தமிழ்நாடு அரசு பள்ளிகளுக்கு ஆணை

(புதுடில்லி)

தமிழ்நாட்டில் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கும் போது குழந்தையின் பெயரிற்கு முன் தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் இதனை அடுத்து தந்தையின் பெயரில் உள்ள முதல் எழுத்தையும் தலைப்பு எழுத்தாக பயன்படுத்தலாம் என்று அரச ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் பேரவையில் விதி 110 இன் கீழ் அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர் பெற்றோர் விருப்பப்படி தாய் அல்லது தந்தை பெயரில் உள்ள முதல் எழுத்தை மட்டும் தலைப்பெழுத்தாகவும் பயன்படுத்தலாம் என்று இந்த அரச ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதை அனைத்து வகைப் பள்ளிகளிலும் பள்ளி சேர்க்கை விண்ணப்பப் படிவத்தில் சேர்த்து கடைப்பிடிக்க வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சிற்றிசன் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு குடிமக்கள் என்ற சொல்லையும் பயன்படுத்தலாம் என்று அரச ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் தாக்கல் செய்த மற்றொரு அறிக்கையில் தெரிவித்தார்.

சிற்றிசன் என்ற ஆங்கிலச் சொலிற்கு இதுவரை தமிழில் குடிமகன் என்ற ஆண்பால் சொல் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்ததாகவும் அவர் கூறினார். (பி-9)

# ''பிருதுவி'' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

(புதுடில்லி)

''பிருதுவி'' ஏவுகணை நேற்று முன்தினம் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

ஒரிஸா மாநிலத்தில் சாந்திப்பூரில் இருந்து நேற்று முன்தினம் இந்தச் சோதனை நடத்தப்பட்டதாக பாதுகாப்புத்துறையினர் தெரிவித்தனர்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்த ஏவுகணை 250 கிலோ மீற்றர் வரை சென்று எளிதில் இலக்கைத் தாக்கக் கூடிய திறன் கொண்டது.

ஒரு தொன் அளவிற்கு வெடி பொருட்களை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. (பி-9)

# பதவிக்காலம் முடிவுறும் வரை முகாபே விலக மாட்டார்

(கராரே)

சிம்பாபே ஜனாதிபதி ரொபேட் முகாபே தனது 6 வருட பதவிக் காலம் 2008 ஆம் ஆண்டு நிறைவுறும் வரை தொடர்ந்தும் பதவியில் இருப்பாரென சிம்பாபே அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுயவிருப்பில் சிலவேளை பதவியில் இருந்து தான் விலக கூடுமென 79 வயதான முகாபே கடந்த வாரம் தெரிவித்ததையடுத்து அவர் பதவி நீடிப்பாரா என்ற சந்தேகம் பலதரப்பிலும் எழுந்துள்ளது.

எனினும், முகாபே தற்போது பதவி விலகமாட்டார் எனவும், அவரது 6 வருடகால பதவிக்காலம் 2008 ஆம் ஆண்டு முடிவடையும் போதே பதவி விலகுவாரெனவும் சிம்பாபே அரசாங்கம் உறுதிபடக் கூறியுள்ளது. (பி-2)

## இந்திய விமானத் தகர்ப்பு

## 18 ஆண்டுகளின் பின்னர்

# கனடாவில் வழக்கு விசாரணை

(புதுடில்லி)

329 பேர் உயிரிழக்க காரணமான கனிஸ்பர் விமானக் குண்டு வெடிப்பு வழக்கின் விசாரணைகள் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் கனடாவில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

1985ஆம் ஆண்டு எயர் இந்தியா நிறுவனத்துக்குச் சொந்தமான ''போயிங்'' 737 ரக விமானம் பயணிகள் உட்பட 329 பேருடன் கனடாவிலிருந்து லண்டன் வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டது.

இந்த விமானம் அயர்லாந்து கடற்பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருந்த போது நடுவானில் வெடித்து சிதறியது.

இதில் இருந்த 329 பேரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்துக்கு சீக்கிய தீவிரவாதி விமானத்தில் வைத்த வெடி குண்டு தான் காரணம் என விசாரணைகளின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சீக்கிய தீவிரவாதிகள் 3 பேர் கனடாவில் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணை 18 ஆண்டுகளுக்கு பின் கனடாவில் நேற்று ஆரம்பமாகியது. இதில் 2 பேர் தாங்கள் குற்றமற்றவர்களென மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

மூன்றாவது நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். இவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1984 ஆம் ஆண்டு சீக்கியர்களின் புனித தலமான பஞ்சாப் பொற் கோயிலுக்குள் இந்திய இராணுவம் புகுந்ததற்குப் பழிவாங்கவே இந்திய விமானம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (பி-2)

# தமிழ் நாட்டில் ஒருவருக்கு சார்ஸ் நோய் பாதிப்பு

(புதுடில்லி)

சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் வேலூர் சீ.எம்.சீ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு சார்ஸ் நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக அம்மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் எஸ்.சி மோகன் தாஸ் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் கடந்த 24 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருடைய இரத்தப் பரிசோதனை புனேயில் உள்ள தேசிய ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டு அந்த நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக ஆட்சித் தலைவர் கூறினார்.

சிங்கப்பூரில் ஓட்டுனராகப் பணி புரிந்து வந்த ஏழுமலை 15 நாட்களிற்கு முன்னர் தான் தமிழகம் வந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

ஏழுமலை தற்பொழுது விரைந்து குணமடைந்து வருவதாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் அவர் வீட்டிற்கு அனுப்பப்படுவார் என்று அவருக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர் தெரிவித்துள்ளார். (பி-9)

## முதல் 4 மாத காலத்திற்குள்

# 7ஆயிரம் சட்டவிரோதவாசிகளை பிரான்ஸ் நாடு கடத்தியுள்ளது

(பாரிஸ்)

இவ்வருடத்தின் முதல் 4 மாத காலப் பகுதியில் சுமார் 7 ஆயிரம் சட்டவிரோத குடியேற்றவாசிகளை பிரான்ஸ் வெளியேற்றியுள்ளது.

பிரான்ஸ் எல்லையில் சட்ட விரோதமாக வாழ்ந்து வந்த 3 ஆயிரத்து 500 பேர் அவர்களது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் நிக்லஸ் சார்கோனி கூறியுள்ளார்.

கடந்த வருடத்தின் முதல் 4 மாதங்களோடு ஒப்பிடும் போது இது 20 வீதத்தால் அதிகரித்துள்ளதென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரான்ஸிற்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முயன்ற போது கைது செய்யப்பட்டு தடுத்த வைக்கப்பட்டிருந்த மேலும் 3 ஆயிரத்து 274 பேரும் அவர்களது சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறிய அவர், புகலிடம் கோருவோரின் கைரேகைகளை பதிவு செய்வதற்கான சட்ட மூலம் ஒன்றை எதிர்வரும் ஜூன் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் கூறினார்.

இந்த விடயத்தை G-8 என்ற அமைப்பில் அங்கம் வகிக்கும் கைத்தொழில் நாடுகளின் உள்துறை அமைச்சுக்களின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (பி-2)

# கொலை தொடர்பாக வழக்குத் தாக்கல

(ஹேக்)

சேர்பியாவின் பிரதமர் ஷொரோ ஜிங்ஜிக் கடந்த மாதம் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 45 பேர் மீது குற்றஞ்சாட்டிய சேர்பிய பொலிஸார் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட 45 பேரில் ஐக்கிய நாடுகள் குற்றவியல் விசாரணை நீதிமன்றத்தில் விசாரணைக்குள்ளாகியுள்ள யுத்தக்குற்றவாளியொருவரும் அடங்குகின்றார்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி 50 வயதான பிரதமர் அரசாங்க கட்டடம் ஒன்றிற்கு முன்பாக கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் 15 பேர் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்ததாகக் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## இஸ்ரேலிய நகரில்

# தற்கொலை தாக்குதல்

(டெல் அவிவ்)

டெல் அவிவ்வில் நேற்று அதிகாலை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம்பெற் றுள்ளது.

டெல் அவிவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகிலிருக்கும் சிற்றுண்டிச் சாலையில் இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலில் 15 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

பலஸ்தீனத் தற்கொலைப் போராளி என சந்தேகிக்கப்படும் ஒருவரே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலுக்கு எதிராகப் பலஸ்தீனப் போராளிகள் நடத்தி வரும் வன்முறைகளைத தடுக்கும் பொருட்டு புதிய அமைச்சரவை ஒன்றை பலஸஜ்தீனம் உருவாக்கிய சில மணி நேரங்களில் இச்சம்வபம் இட்ம் பெற்றுள்ளது.

மத்திய கிழக்கில் புதிய சமாதான திட்டங்களை சமாாதன ஏற்பாட்டாளர்கள் முன்வைப்பதற்கு ஏதுவாக சர்வதேச அழுத்தங்களுக்கு மத்தியில் இந்த அமைச்சரவை பலஸ்தீனதில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

## ஸ்டாலின் மனு தள்ளுபடி

(புதுடில்லி)

சென்னை இராணி மேரிக் கல்லூரியில் அத்துமீறி நுழைந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் கைதாகி நிபந்தனைப் பிணையில் பெற்றுள்ள தி.மு.க இளைஞரணி செயலாளர் மு.க ஸ்டாலின் நிபந்தனைகளைத் தளர்த்தக் கோரி தாக்கல் செய்த மனுவினை சென்னை முதன்மை சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. (பி-9)

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது

14.04.03 அன்று நல்லூர் முருகன் கோயில்வீதியில் க.அகிலேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல: 686150950V,விசேட அடையாள அட்டை என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் நவீனா நகையகம,இல:189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், T.P 0777-115625 என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (C-6084)

## இந்து மாநாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டுப் பிரமுகர்கள் வட-கிழக்கு போர் அழிவுகளைப் பார்வையிடுவர்

(கொழும்பு)

கொழும்பில் நாளை வெள்ளிக்கிழமை முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்ள வரும் பிரமுகர்கள் யுத்தத்தினால் அழிவிற்குள்ளான வடக்கு-கிழக்கு பிரதேசங்களையும் பார்வையிடுவார்கள் என இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் நேபாள நாட்டின் கலாசார சுற்றுலாத்துறை சிவில் போக்குவரத்து அமைச்சர் கோப்பர் பிரசாத் சர்மா, ஆந்திரப் பிரதேச இந்து சமய விவகார அமைச்சரும் திருப்பதி ஆலய அரசதரப்பு நிர்வாகியுமான சாந்தி சிவராமராஜா ஆகியோரே இவ்வாறு வடக்கு-கிழக்கு பிரதேசங்களை பார்வையிடவுள்ளனர்.

இதேவேளை, இம்மாநாட்டில் இந்திய இராஜசபை உறுப்பினரும் பிரபல நடிகருமான சரத்குமார் அவரது மனைவி நடிகை ராதிகா, சட்டசபை உறுப்பினரும் நடிகருமான நெப்போலியன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## புற்றுநோய்ச் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள புற்றுநோய் வைத்திய நிபுணர் இம் மாதம் 6,7 ஆம் திகதிகளில் தெல்லிப்பழையில் அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை வழங்கவுள்ளார் எனவும் கிளினிக் கொப்பிகளை எடுத்துச் சென்றவர்கள் கொப்பிகளை எடுத்து வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இலங்கை - நியுசிலாந்து ரெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது

(கொழும்பு)

கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் இலங்கை அணிக்கும் நியுசிலாந்து அணிக்குமிடையில் நடைபெற்ற முதலாவது ரெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நியுசிலாந்து அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதனையடுத்து இரு அணிகளதும் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் முதலாவது ரெஸ்ட் போட்டி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

முதலாவது இனிங்ஸில் நியுசிலாந்து அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 515 ஓட்டங்களையும் இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 483 ஓட்டங்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## தீ அனர்த்தம் தவிர்க்கப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை 2 ஆம் குறுக்கு வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்து தீயணைப்பு படைப்பிரிவின் உதவியுடன் அணைக்கப்பட்டது.

இத்தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லையென்றும் இத்தீ ஏனைய கட்டடங்களுக்குப் பரவாமல் இருப்பதற்கான முயற்சியை தீயணைப்புப் படையினர் துரிதமாக மேற்கொண்டதால் உயிர் சேதங்களோ பொருட் சேதங்களோ ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு கொம்பனி வீதியில் உள்ள வீடொன்றிலும் இதே நேரம் தீவிபத்து ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்விரு தீவிபத்துகள் தொடர்பாக பொலிசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (உ-10)

## 5 ஆண்டுகள் சிறையில் வாடிய தமிழ் இளைஞருக்கு விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் களுத்துறைச் சிறைச்சாலையில் 5 வருடமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

ரமேஷ்காந்தன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவர் வெள்ளவத்தை கடையொன்றில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் கடந்த 1998ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பயிற்சி பெற்றவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்.

சிங்களமொழியே தெரியாத இவரிடம் ஆரம்பக் கட்ட வாக்கு மூலங்கள் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்பட்டன.

இதனையடுத்து இவரது வழக்கை விசாரித்த களுத்துறை மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நாணயக்கார பாலபட்டபெந்தி இவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, களுத்துறைச் சிறைச்சாலையில் மேலும் 45 தமிழ் அரசியல் கைதிகள் இருப்பதாகவும் அவர்களை படிப்படியாக விடுதலை செய்யவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. (உ-10)

## மலையகச் சிறார்களை வேலைக்கமர்த்துவதைத் தடுக்க உடன்படிக்கை

(கொழும்பு)

பெருந்தோட்டப்பகுதிகளில் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுக்கும் நோக்குடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் உடன்படிக்கையை சர்வதேச தொழில் அமையமும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கைச்சாத்திட்டுள்ளன.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இக் கைச்சாத்து நிகழ்வு இடம் பெற்றது.

இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் 54 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் சர்வதேச தொழில் அமையத்தின் மூலம் இலங்கைக்குக கிடைக்கவுள்ளது. (உ-8)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுக் கழகம் நடத்திய ''ஞானச்சுடர்'' சஞ்சிகை அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு பரிசில்களை எஸ்.அன்னதாஸன் வழங்குவதைப் படத்தில் காணலாம். படம்:பருத்தித்துறை நிருபர்.

## வழக்கு விசாரணைக்கு அனுமதி

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்துக்கு அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மனித உரிமை ஆர்வலர் அன்ரனி இம்மானுவேல் பெர்னாண்டோ, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகள் இருவருக்கு எதிராக தாக்கல் செய்திருந்த இவ்வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இவ்வழக்கு விசாரணை தொடர்பாக இரு சிறைச்சாலை அதிகாரிகளையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நிதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-8)

## உணவு பதனிடும் துறையில் முன்னணி வகிக்கும் இலங்கை

(கொழும்பு)

அதிநவீனதொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உணவு பதனிடும் துறையில் தெற்காசிய நாடுகளில் இலங்கையே முன்னணி வகிப்பதாக சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிலையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் சுரேஷ் பாபு தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் விவசாயத்துறையை மேம்படுத்தி அதனூடாக வறுமையை ஒழித்தல் என்ற தொனிப்பொருளில் அமைந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஆலோசகர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தெற்காசியப் பிராந்தியத்தில் பொருளாதார மறுசீரமைப்பு அறிமுகப் படுத்திய முதல் நாடு இலங்கையே.

இலங்கைக்குப் பின்னர் தான் இந்தியா இந்தப் பொருளாதார மறுசீரமைப்மை அறிமுகப்படுத்தியது.

எனவே இத்தகைய விவசாய வர்த்தகத்துறையை மேம்படுத்துவதன் மூலம் வறுமை ஒழிப்பிற்கு இது பெரிதும் உதவும் என்றார்.(உ-10)



பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக தையல் கண் காட்சியை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கா.வேதநாயகன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைபபதையும், அருகில் பளைப் பிரதேச செயலர் சு.புத்தி சிகாமணி நிற்பதையும் படத்தில் காணலாம். படம். சி. சிவகணநாதன்.

## 15 ஆயிரம் குடும்பங்கள் குடாநாட்டில் மீள் குடியமர்வு

(தென்மராட்சி)

ஏ-9 பாதை மூலம் வன்னியிலிருந்து இதுவரை மீளக் குடியமர வந்த 15 ஆயிரத்து 742 குடும்பங்கள் நல்லூர், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, சங்கானை மற்றும் வேலணை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மீளக் குடியமர்ந்துள்ளன.

இந்த வகையில் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 935 குடும்பங்களும், சண்டிலிப்பாயில் 2 ஆயிரத்து 528 குடும்பங்களும், உடுவிலில் ஆயிரத்து 573 குடும்பங்களும், தெல்லிப்பழையில் ஆயிரத்து 40 குடும்பங்களும், கோப்பாயில் 2ஆயிரத்து 429 குடும்பங்களும், சாவகச்சேரியில் 3 ஆயிரத்து 144 குடும்பங்களும், சங்கானையில் ஆயிரத்து 762 குடும்பங்களும், வேலணையில் ஆயிரத்து 331 குடும்பங்களுமாக மொத்தம் 15ஆயிரத்து 742 குடும்பங்கள் இதுவரை மீளக் குடியமர்ந்துள்ளன.

இது இவ்வாறிருக்க மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் இருக்கின்ற பாடசாலை செல்கின்ற பிள்ளைகளுக்கான பாடசாலைச் சீருடைகள் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இப்பிள்ளைகளுக்கு பாடசாலைச் சீருடைகள் வழங்கப்படாமைக்கு இவர்கள் முன்னர் படித்த பாடசாலைகளில் இருந்து உரிய கடிதங்களைப் பெற்று வராமையே காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, குறித்த கடிதங்களைப் பெற்றுவருவதற்கென வன்னிக்குச் சென்று வருவதற்கான கட்டணம் அதிகமாக இருப்பதால் தமக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-77)

## தங்கு மண்டபம் அமைப்பு

(வேலணை)

நயினாதீவு மக்களினதும் அங்கு செல்லும் யாத்திரிகர்களினதும் நலன் கருதி வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் குறிகட்டுவான் இறங்கு துறையில் அமைக்கப்பட்டு வரும் தங்கு மண்டபம் அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

ஏற்கனவே மேற்படி இடத்தில் வேலணைப் பிரதேச சபையின் அனுசரணையுடன் தங்கு மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கவை. (உ-47)

## ஜப்பானிய மருத்துவர்குழு வவு.ஆஸ்பத்திரிக்குவிஜயம்

(வவுனியா)

ஜப்பானிய விசேட மருத்துவக் குழுவொன்று நேற்று முன்தினம் வவுனியா வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளது.

இக்குழுவினர் இம்மாதம் 8 ஆம் திகதி வரை அங்கு தங்கி இருந்து உதட்டுப்பிளவு, அண்ணப்பிளவு ஆகியவற்றுக்கான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர் என வவுனியா மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய விசேட சத்திர சிகிச்சைக் குழுவொன்று வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். (உ-8)

# உயர் பாதுகாப்பு வலய இடமாற்ற யோசனை தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது

## ஜனாதிபதியைச் சந்தித்து ஜே.வி.பி எடுத்துரைப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்பு வலயங்களை புலிகளின் விருப்பங்களுக்கேற்ப மாற்றம் செய்வதை உடனடியாக நிறுத்தும் விதத்தில் இது விடயத்தில் தலையீடு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவை ஜே.வி.பி கேட்டுக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதியை அவரது மாளிகையில் சந்தித்த ஜே.வி.பி,

உயர் பாதுகாப்பு வலயங்களை இடம்மாற்றி வைக்குமாறு தாம் கேட்பது இடம்பெயர்ந்த மக்களை குடியமரச்செய்வதற்கே என்று புலிகள் காரணம் காட்டுகின்றனர். ஆனால், வேறு பல விடுவிக்கப்பட்ட பகுதிகள் இன்னுமே குடியேற்றங்கள் நடைபெறாமலேயே உள்ளன என்று சுட்டிக்காட்டியது.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்களை இடமாற்றும் அரசாங்கத்தின் யோசனை தேசியபாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதாகும் எனவும் கண்டித்துள்ளது.

புலிகளுக்கு உண்மையில் தேவைப்படுவது வடபகுதியில் உள்ள படைமுகாங்களை ஒரு சிறு பகுதிக்குள் கட்டுப்படுத்தி வைப்பதாகும். இதனால் இப்பகுதிகளை புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் படி கேட்கும் புலிகளுக்கு ஏழு மைல்கள் வரை நீளமான உயர் பாதுகாப்பு வலயங்கள் உளளன. இவற்றினுள் குடிமக்கள் செல்வது தடைப்பட்டுள்ளது.

அரசாங்கம் புலிகளின் ஒவ்வொரு கோரிக்கையையும் நிறைவேற்றி வருகிறது. பேச்சுக்களுக்கு புலிகளை மீண்டும வரச் சொல்வதற்காகவே அது இவ்வாறு செய்கிறது. இதில் ஜனாதிபதி தலையிட்டு உயர் பாதுகாப்பு வலய இடமாற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் ஜே.வி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ)

### 200 தொடர்மாடி வீடமைப்பு

(கொழும்பு)

கிளிகத்தேன ஹரோலினாத் தோட்டப் பகுதியில் 200 தொடாமாடி வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ. சந்திரசேகரன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பெருந்தோட்டமக்களின் லயம் வாழ்க்கைக்கு முடிவுகட்டும் நோக்குடன் பெருந்தோட்டப்பகுதிகளில் தொடர்மாடிவீடுகளை அமைக்க வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைபபு அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவது தெரிந்ததே. (உ-8)

### 10 வீடுகள் அமைப்பு

(சில்லாலை)

மாதகல் கிழக்கில் உள்ள சகாயபுரம் பகுதியில் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பத்து வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கடந்தகால வன்முறைகளின் போது வீடுகளை இழந்த 10 குடும்பங்களுக்கே இவ்வீடுகள் வழங்கப்படவுள்ளன. (உ-58)

# அடக்கியாளும் தீய சக்திகளை விடுதலைத் தீ அழிக்கும்

## விவசாய நுகர்ச்சி கூ. ச. சமாச மேதினச் செய்தி

(யாழ்ப்பாணம்)

உலகத்தொழிலாளர் தம் உரிமைகளை வென்றெடுத்த மே நாளில், சிறிலங்கா அரசினால் கட்டவிழ்தது வடப்பட்ட தமிழ் இன ஒடுக்கு முறையை எம் இன எழுச்சியால் உலகத்திற்கு உணர்த்த தமிழ்த்தேசிய இனத்தின கூட்டு மே நாள் குழு ஏற்பாடு செய்துள்ள மேநாள் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப் பணிப்பாளர்களும், கலந்து கொண்டு கூட்டுறவு இயக்கத்தின் எழுச்சியை பறைசாறுமாறு யாழ். மாவட்ட விவசாய, நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப. கனகலிங்கம் அறைகூவல் விடுத்துள்ளார்.

அரசு- புலிகள் இணைந்து உருவாக்கிய புரிந்துணர்வு உடன்பாடு ஓராண்டை தாண்டிவிட்ட நிலையில் அதன் நடவடிக்கை கேள்விக்குறியாக மாறியுள்ளது. இதனால் தான்!

நிரந்தர சமாதானம் அரசியல் தீர்வு என்பன பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. உடன்பாடு எட்டப்பட்டபோது இருந்த மகிழச்சியும் எதிர்பார்ப்பும் தேய்ந்து வருகின்றது.

இத்தேக்க நிலைகளை மாற்றி புதிய நம்பிக்கையூட்டும் அரசியல் சூழ்நிலைகள் தோன்ற எதிர்வரும் மேநாளை பயன்படுத்துவோம். எமது எழுச்சி இனத்தின் விடுதலைக்கு உரமூட்டும்,

அதேவேளை கடந்த காலங்களில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூட்டுறவாளர்களே பல மில்லியன் ரூபா கூட்டுறவுச்சங்களுக்கு இழப்பு ஏற்பட்டது. ஆனால் இது வரை அரசிடமிருந்து எவ்வித இழப்பீடும் கிடைக்கவில்லை. கூட்டுறவுப் பணியாளர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியமோ, ஊக்குவிப்போ கிடைப்பதில்லை.

எதிர்காலத்தில் கூட்டுறவுப்பணிபபாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் அது மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும். கூட்டுறவாளர்களும், கூட்டுறவுப்பணியாளர்களும் யுத்த சூழ்நிலையில் மக்களுக்காக கடுமையாக உழைத்தவர்கள் என்பதை இம் மே நாளில் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இம்மே நாள் தொழிலாளர் வர்க்கத்தினரின் உரிமைப்போராட்டத்திற்கு குரல் கொடுப்பதோடு நின்றுவிடவில்லை. மாறாக தமிழ் பேசும் இனத்தின் முழு விடுதலைக்காகவும் குரல்கொடுக்கிறது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.

தமிழினத்தை அடக்கி ஆளமுற்படுகின்ற தீய சக்திகளை விடுதலைத் தீ அணைத்துக்கொள்ளும் என்பது நிச்சயம்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் மே நாள் அமைய வேண்டும். ஒட்டுமொத்தமான தமிழ் இனத்தின பேரெழிச்சியை உலகம் புரிந்து கொண்டு எம் தேசிய விடுதலையை உறுதிப்படுத்தவேண்டும் என இம் மே நாளில் உரத்த குரல் கூறி நிற்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தெற்காசிய நாடுகள் கூடி "சார்ஸ்" தடுப்பு பற்றி ஆராய்வு

(கொழும்பு)

சார்ஸ் நோயின் பிடியில் இருந்து எவ்வாறு தப்புவது என்பது தொடர்பாகவும் அவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் 7 தெற்காசிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் மாலைதீவில் ஆராய்ந்துள்ளனர்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சார்ஸ்நோயின் தாக்கம் தெற்காசிய நாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தாது விட்டாலும் இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு அவசரமானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மாலைதீவு ஜனாதிபதி மஹமூன் அப்துல் ஹயூம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

இந்த நாடுகளின், முக்கிய நகரங்களை மக்கள் செறிந்து வாழ்வதுடன் பல கிராமங்கள் கைவிடப்பட்டநிலையில் உள்ளன. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் உரிய தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படாது விட்டால் தெற்காசிய நாடுகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றார்.

மேலும் தெற்காசியப் பிராந்திய கூட்டுறவு நாடுகளுக்கடையில் தகவல் குடிவரவு கட்டுப்பாடு போன்ற விடையங்களை ஒவ்வொரு நாடும் பகிர்ந்து கொள்ள கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமெனவும் அவர் சுட்டிக் காட்டினார். (உ-10)

# மே தினக் கவிதைகள்

## உயிரும் தொழிலாளர்

உலகுக்கு உயிரீயும்
ஊற்றான தொழி லாளர்
பலமதனை நிரூ பிக்கும்
பாங்கான 'மே' நாளாம்

உரிமைகளை வென் றெடுக்க
ஓங்கிக் குர லெழுப்பும்
அருமைமிகு இந் நாளின்
அர்த்தம் அரங் கேறும்

தொழிலாளர் வாழ் வதனைத்
துலக்கிடவே வழி வகுக்கும்
பழுதற்ற வேட்கை யென்றும்
பாருக்கே படிப் பாகும்

'மே' தினத்தில் கூடி யொலி
மேதினியில் எழுப்பு கின்ற
சேதிக்குச் செய லுருக்கொடுத்துச்
செகத்தினையே வாழ வைப்போம்

கூத்தாடி வி.சி. குஞ்சிதபாதம்

## மே தினம்

ஒடுக்கப்பட்ட மக்களும் அடக்கப்பட்ட மக்களும்
ஒன்று சேர்ந்து கொண்டாடும் தினம் - மே தினம்
பாட்டாளி மக்களும் பாமர மக்களும்
பாடி ஆடி மகிழும் தினம் - மே தினம்
கூலித்தொழிலாளியும் குடிசைத் தொழிலாளியும்
கூடிக்குலாவி கும்மாளமிடும் தினம் - மே தினம்
படித்தவர்களும் பாவலர்களும் போற்றும் இந்த மே தினம்
எட்டுமணி நேர வேலைக்காக போராடிய தினமே தான்.

காரை. சிவா

## மறக்க முடியாத நாளிதுவே!

மனிதவலுவின்
மாண்பு இங்கு
இனிதாய் தோன்றும்
இந் நாளில்!

மே ஒன்று...!
மேன்மை நிறை நாளன்றோ
மேட்டுக் குடி முதல்
பட்டிக் காடு வரை
பரஸ்பரம் கைகோர்க்கும்
பண்பட்ட நாளன் றோ!

மறுக்கப் பட்ட உரிமைகளை
மார் தட்டிப் பெற்றுக்கொண்ட
மறக்க முடியா நாளிதுவே!

இன்னுமின்னும்...
உரிமை மறுப்புகளை
உடைத்தெறிய!
சமூகச் சாக்கடைகளை
சல்லடை போட!
நசுக்கும் கரங்களை
நறுக்கி எறிய!
தொழிலாளர் வர்க்கமே!
தோன்று என்றும்
ஓர் அணியில்!

சூரியநிலா
ஈச்சமோட்டை

## ஓரணியில் திரண்டிடுவோம்

மண்மீதில் தன்வியர்வை சிந்தியுழைக் கின்றவர்கள்
மகிமையினை உலகுகாண
மானமரி யாதையொடும் வாழ்கின்ற உரிமையினை
மண்ணிலிவர் பெற்றுமேக
விண்மீதும் ஒளிர்கின்ற விரிகதிரோன் உடுக்களொடும்
விளம்பிநிதம் மகிழுமாறே
வீழ்ந்துபலர் உரமாகி உயிர்தந்த மேன்மையினால்
பெற்றெடுத்த உரிமையென்னும்
திண்மையினை நினைந்துதிசை நான்கினிலும் இருந்து வரும்
பேரணிகள் பலவாகவே
திகழுதொழி லாளர் புகழ் பாடியவர் கீர்த்திதரு
கீதமதும் நெஞ்சிலினிக்க
வண்ணமுற வையமதன் மக்களெல்லாம் ஓரணியில்
திரண்டு திரு வார்த்தையுரைக்க
வருடமதில் வந்தொருநாள் இனிக்கின்ற பெருமைமிகு
தொழிலாளர் திருநாளிதே

தெல்லிப்பழை — சு. குகதேவன்

## பாட்டாளிகள் தினம் மே தினம்

நெற்றி வியர்வை நிலத்தில் வீழ்ந்திட
நித்தம் உழைப்பவன் பாட்டாளி
வாடிவதங்கியே தன்னுடல் பாராது
வளம்பல நல்குபவன் பாட்டாளி

காலையோ மாலையோ களைப்பு பாராது
கடினமாய் உழைப்பவன் பாட்டாளி
சாலை களெங்கணும் சலிப்புப்பாராமல்
வேலைகள் செய்பவன் பாட்டாளி

எந்த நிலையிலும் இப்புவி சிறந்திட
ஏற்றம் புரிபவன் பாட்டாளி
அந்த கல்மனம் மகிழ்ந்திடநாளும்
நானிலம் கொண்டாடும் மே தினமே

நீர்வைமணி

## 15 ஆயிரம் படையினர் இணைந்து தொடுத்த

# தீச்சுவாலை படை நடவடிக்கையை

# எமது தலைவரின் மதியு,கம் முறியடித்தது

### வடமுனைக் கட்டளைத் தளபதி தீபன் வெற்றிப் பெருமிதம்

(பளை)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத் தமையை இலங்கை அரசு புலிகள் பலவீனப்பட்டுவிட்டார்கள். என்று தவறாக எண்ணியே புலிகளுக்கு எதிரான 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது என விடுதலைப்புலிகளின் வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

பளையில் கடந்த திங்கள் அன்று நடைபெற்ற ஆனையிறவு பெருந் தளத் தகர்ப்பு ,தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்பு ஆகிய வற்றை நினைவுகூரும் வெள்ளி விழாவில் உரையாற்றும் போதே தீபன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசு கையில் கூறியதாவது,

இலங்கை இராணுவத்தினரின் முன்னணிப் படைப் பிரிவுகளான 53வது டிவிசன்,55வது டிவிசன் ஆகிய படையணிகளை இணைத்து அதனுடன் 51வது படையணி யையும் இணைத்து சுமார் 15 ஆயிரம் படைகளையும் தீச்சுவாலை படை நடவடிக்கையில் அரசு ஈடுபடுத்தி யது.இப்படை நடவடிக்கைக்கு எதிராக தேசியத்தலைவர் மதிநுட்பத்தைப் பயன்படுத்தி, யுத்தவியூகத்தைத் திறம்பட அமைத்து முறியடித்தோம்.

மக்கள் துணையுடன் நாம் இருக்கும் போது எங்களை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. தாம் என்றுமே பலமான நிலையிலேயே உள்ளோம். மக்கள் சக்தியும் அவர் களது ஆதரவும்இருக்கும் வரையில எந்த நெருக்கடியையும் எதிர்கொள ளக்கூடிய பலமான நிலையில் நாம் இருப்பதால் தமிழீழத் தேசியத்தலை வரின் கரங்களைப்பலப்படுத்தி சமாதானச் சூழலில் தாம் விழிப் பாகஇருப்போம் என்று கேணல் தீபன் மேலும் தெரிவித்துள்ளார்.(ம)

## முகாம் அமைப்புக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த கோட்டை வட்டார மக்கள் 20 வருடங்களின் பின்னர் இன்றைய சமாதான சூழ் நிலையில் மீளக் குடியமர ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் கோட்டைப் பகுதியில் இராணுவமுகாம் அமைப் பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு எடுத்திருக்கும் முடிவு பாதிக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளை மீறும் செயல் என யாழ். கொட்டடி ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையம் சார்பாக அதன் தலைவரும் முன்னாள் மாநகர சபை உறுப்பின ருமான செல்லையா விஜயரட் ணம் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## காலை நேர மின்வெட்டு

(சில்லாலை)

சில்லாலைப் பகுதியில் மின்சார விஸதரிப்பு வேலைகள் நடை பெற்று வருகின்றமையால் கடந்த இரு வாரங்களாக இப்பகுதியில் காலை நேர மின்வெட்டு அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. (உ-58)

## சமாதானத்தை நிலை நிறுத்தும் பொறுப்புஊடகங்களுக்கே உரியது

### அமைச்சர் இம்தியாஸ்தெரிவிப்பு

(கொழும்பு)

நீண்டகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ,நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மேறகொள்ளப்பட்டு வரும் இன்றைய முயற்சிகளுக்கு ஊடகங்கள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்கு வதுடன் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.


ஊடகத்துறை அமைச்சர் இம் தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்று முன்தினம் கொழும்பு பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும் போது இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர் இம்தியாஸ்,

யுத்தத்தை தொடர்ந்து நடத்து வதிலும்பார்க்க,நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அதிக அளவு காரியங்களை சாதிக்க வேண் டியுள்ளது.

சில அரசியல் கட்சிகளின் அற்ப, சொற்ப ஆசைகளைக்கருத்தில் கொணடு,இச் சமாதான முயற்சிகள் தடைப்பட்டுவிடக்கூடாது.

சமாதானத்தை நிலை நிறுத்தும் பொறுப்பு ஊடகவியலாளருக்கு உணடு எனவே சமாதானம் தொடர் பான செய்திகளை ஊடகங்கள் உன்னிப்புடன் அவதானித்து



கையாள வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டார். (உ-8)

## அட்டகாசக் கும்பலை மடக்கிப் பிடித்தனர் புலிகள்

(சில்லாலை)

வீடு புகுந்து அட்டகாசம் புரிந்த இளைஞர் கும்பலை மடக்கிப் பிடித் தனர் விடுதலைப்புலிகள்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வடலியடைப்பு அர சடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது,

சிற்றூர்தி ஒன்றில் இருந்து கத்தி,வாள்,தடி,கம்பி போன்றவற் றுடன் வந்திறங்கிய சுமார் 30 பேர் கொண்ட இளைஞர் குழு வடலி யடைப்பு அரசடியில் உள்ள வீடொன் றினுள் புகுந்தது.

அங்கு ஆட்கள் எவரும் இருக் காததால் ஆத்திரமுற்ற இக் குழு வீட்டையும் வீட்டிலுள்ள பொருட் களையும் அடித்து நொருக்கிய துடன் அயல் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் செய்தனர்.

இது விடயத்தை வடலியடைப்பு இளைஞர்கள் சிலர் விடுதலைப் புலிகளின் அப்பகுதிப் பணிமனைக்குத் தெரியப்படுத்தியதையடுத்து உடன் அவ்விடம் விரைந்த புலிகள் அட்டகாசக் கும்பலில் ஒரு பகுதியை மடக்கிப் பிடித்ததுடன் அவர்கள் பயன்படுத் திய வாகனத்தையும் கைப்பற்றினர்.

இதேவேளை,இவர்களில் சிலர் தப்பியோடி விட்டதாகவும் கூறப்படு கிறது. (உ-58)

## அனுருத்தவின் பாதுகாப்புக்கு பொலிஸ்மா அதிபர் உத்தரவாதம்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தைக்கு வேண்டிய பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸ்மாஅதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை பாதுகாப்பு குறித்து, அச்சிறைச் சாலை ஆணையாளருடன் பொலிஸ்மா அதிபர் பேச்சு வார்த்தை நடத்தியுள ளார்.

இம்மாதம் 5ஆம்திகதி முதல் அனுருத்தரத்வத்தைக்கு கடும் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு விசாரணை நடைபெறும் போது நீதி மன்றத்துக்கும் கடும் பாதுகாப்பு வழஙகப்படும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு தேவையான பாதுகாப்பை வழங்குமாறும் நீதி பதிகள் குழு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

## பெயரளவில் இயங்கும் தகவல் திணைக்கள அலுவலகம்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட அரச செயலக வளாகத்தில் கடந்த வருடம் யூன் மாதம் 16ஆம் திகதி ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்காரால் திறந்து வைக்கப்பட்ட தகவல் திணைக்கள அலுவலகம் கடந்த 10 மாத காலமாக எத் தகைய செயற்பாடுகளும் அற்ற நிலையில் இருந்து வருகின்றது.

இவ்வலுவலகத்தில் பொருத்தப் பட்ட கணனி மற்றும்தெலைபேசி போன்றவற்றினால் யாழ். மாவட்டத் தில் உள்ள செய்தியாளர்கள் இதன் உச்சப் பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளமுடியும் என அமைச்சரால் கூறப்பட்டிருந்த போதிலும் இங்கு எதுவும் செயற்படுத்தப்பட்டாமை குறித்து மாவட்டச்செய்தியாளர்கள் மிகவும் அதிருப்தி கொண்டுள் ளனர்.

அதேவேளை, கடந்த 10 மாத காலமாக இங்கு கடமையாற்றி வரும்பெண் ஊழியர் ஒருவருக்கு எத்தகைய சம்பளக்கொடுப்பனவும் இது வரை வழங்கப்படவில்லை எனவும்தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்ட செய்தி யாளர்கள் மற்றும் பொது மக்களின் நன்மை கருதி யாழ். மாவட்ட அரச தகவல் திணைக்களம் குடாநாட்டு மக்களின் நன்மை கருதி எத்தகைய பணிகளையும் ஆற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

### மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு

## கடந்த ஆண்டு சுமார் 23ஆயிரம் கண்ணி வெடிகளை அகற்றியது

(தென்மராட்சி)

வன்னியில் இயங்கி வரும் மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் 1999முதல் 2002 டிசம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் ஒரு இலட்சத்து 68 ஆயிரத்து 492 கண்ணி வெடிகளை அகற்றி அழித்துள்ளனர்.

இந்த வகையில், 1999ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரைக்கும் ஒரு இலட்சத்து 44ஆயிரத்து 628 கண்ணிவெடிகளையும் 2002 ஜனவரியில் 3183உம்,பெப்ரவரி யில் 3277உம் மார்ச்சில் 3418உம் ஏப்ரலில் 3902உம்,மேயில் 4253 உம்,ஜூனில் 59உம்,ஜூலையில் 105உம், ஆகஸ்டில் 66உம்,செப்ரெம் பரில் 250 உம்,அக்டோபரில் 1385உம், நவம்பரில் 1086உம், டிசம்பரில் 2900 கண்ணிவெடிகளை அகற்றி அழித்துள்ளனர்.

இப்பிரிவினரின் பணிக்கு உதவியாக என்.பீ.ஏ.மைக்,எவ்.எஸ்.டி. ஆகிய நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங் கமைப்பில் வேண்டிய உதவிகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத் தக்கது. (உ-77)

### நாடளாவிய ரீதியில்

## தகவல் தொ. நு. நிலையங்கள்

### 2006 ஆம் ஆண்டு அமுல்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 52 தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு, தொழிற்பயிற்சி அமைச் சும் இணைந்தும் இத்திட்டத்தை அமுல்படுத்தவுள்ளன.

இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு 400 பில்லியனுக்கும் கூடுதலானது என தகவல் தொழில நுட்ப திட்டப் பணிப்பாளர் ஹேமச் சந்திரா தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதி உதவிகளினை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கு மெனவும், இது 2006ஆம் ஆண்டில அமுல் செய்யப்படும் எனவும் திட்டப்பணிப்பாளர் மேலும் தெரி வித்துள்ளார். (உ-8)

## ஆச்சேஸ் விழா

(யாழ்ப்பாணம்)

புனித மரியாயின் சேனையின் 'ஆச்சேஸ் விழா' நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் நடை பெறவுள்ளது.

இவ்விழாவில் மரியன்னை திருச் சொரூபம் முன்பாக வேண்டுதல், திருப்பலி, ஆன்மீக இயக்குனர் தந்தையர்களின் மறையுரை சேனை யின் சங்கிலிச் செபம், ஞானப் பூச் செண்டு ஒப்படைத்தல் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (உ-10)

## மணலாற்றில் சிங்களக் குடும்பங்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்திலிருந்து கடந்த கால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த சிங்கள மக்களின் ஒரு தொகுதியினரை மீளக் குடியமர்த்துவதற்கு புனர்வாழ்வு, மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

மணலாறு மாவட்டத்தில் இருந்து ஆயிரத்து 840 சிங்களக் குடும்பங்கள கடந்த காலங்களில் இடம்பெயர்ந துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர்,நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட்டு வருகின்றன.

இதற்கமைய மணலாறுப் பகுதி யில் முதற்கட்டமாக சுமார் 200 சிங் கள குடும்பங்கள் மீள் குடியேற்றப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,மணலாறு மாவட் டத்தில் இருந்து கடந்த போர்க்காலங் களில் விரட்டி அடிக்கப்பட்ட பூர் வீகத்தமிழ் குடிகளை மீளக் குடிய மர்த்த எந்த வொரு நடவடிக்கையும இது வரை எடுக்கப்படவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

### நம்பிக்கை தான் முக்கியம்

ஒரு தடவை நாரதர் ஒரு தெருவழியாகப் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒருவர் வேத சாத்திரங்கள் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் நாரதரைப் பார்த்து "எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "கடவுளைப் பார்த்து விட்டு வரலாமென்று போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார் நாரதர். அப்படியென்றால், அவரிடம் எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டுக் கொண்டு வாருங்கள்" என்றார் இவர். "சரி, கேட்டுக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நாரதர் நடந்தார்.

கொஞ்சத் தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒரு தொழிலாளி செருப்புத் தைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த ஆளும் அதேமாதிரிக்கேட்டுக்கொண்டார். அவரிடமும் "சரி என்று சொல்லி விட்டு நாரதர் நேராக வைகுண்டத்துக்கு வந்து சேர்ந்தார். கடவுளைப் பார்த்தார். இவர்கள் இரண்டு பேரும் சொல்லி அனுப்பிய விஷயத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு கடவுள். "அந்தச் செருப்புத் தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான். ஆனால் அந்தச் சாத்திரம் படித்தவர் என்னிடம் வந்து சேரமாட்டான். அவன் இன்னமும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியிருக்கிறது. எப்போது இங்கே வந்து சேர்வார் என்று எனக்கே தெரியாது" என்றார்.

நாரதருக்கு இதனுடைய இரகசியம் என்ன என்பது புரியவில்லை. கடவுளிடம் "எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றார். கடவுள் சிரித்துக் கொண்டே "சீக்கிரம் புரிந்துகொள்வாய்! நீ திரும்பிப் போகிற போது நான் இங்கே வைகுண்டத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று கேட்டால், ஓர் ஊசியின் துவாரத்தில் ஒரு யானையைக கோர்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லு" என்றார். நாரதர் பூமிக்குத் திரும்பினார்.

வேத சாஸ்திரம் படித்தவர் "கடவுளைப் பார்த்தீர்களா? எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார். "ஓ... பகவானா? அவர் யானையை ஊசியின் காதிலே நுழைத்துக் கொண்டிருந்தார். பார்த்தேன்" என்றார் நாரதர் "ஊசியின் காதிலே யானையா? அது எப்படிமுடியும்? நீங்கள சொல்வதை நான் நம்பமாட்டேன்" என்று விட்டார். "சரி" இந்த ஆளுக்கு இறைவன் மீது நம்பிக்கை இல்லை. என்பதை நாரதர் புரிந்து கொண்டார். அடுத்த படியாக அந்த தொழிலாளி இருந்த இடத்துக்குப்போனார். "இறைவனைப் பார்த்தீர்களா" என்று கேட்டார் அவர். "பார்த்தேன் ஒரு ஊசித்துவாரத்தில் யானையைப் போர்த்துக்கொண்டிருந்தார்" என்று சொல்லி விட்டு அந்த ஆளின் முகத்தைக் கவனித்தார். அந்தத் தொழிலாளி இதைக்கேட்டுவிட்டு கொஞ்சம் கூட ஆச்சரியப்படவில்லை! அவரால் முடியாத காரியம் கூட உண்டா? என்றார். "என்ன இப்படிச் சொல்கிறாய்? ஊசியின் தூவாரத் தில் யானையைக்கோர்க்க முடியும் என்று நம்புகிறாயா?" என்று கேட்டார் நாரதர்.

நிச்சயமாக நம்புகிறேன் என்றார். அவர் .அது எப்படி?என்று கேட்டார் இவர். "இதோ பாருங்கள் ... நான் இந்த ஆலமரத்தடியிலே தான் தினமும் உட்கார்ந்திருக்கிறேன். தினமும் இந்த மரத்தில் இருந்து எவ்வளவு பழங்கள் கீழே விழுகின்றன?இந்த பழத்திலே இருக்கிற ஒவ்வொரு விதையிலும், உள்ளே ஒரு ஆலமரம் இருக்கிறது. ஒரு சிறு விதையினுள்ளே பெரிய ஆலமரம் இருக்க முடியும் என்கின்ற பொழுது ஊசித்தூவாரத்தில் கடவுள் ,யானையை நுழைய வைத்தார் என்பதை ஒத்துக்கொள்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது?" என்று மிகவும் சர்வ சாதாரணமாகப்பதில் சொன்னார் அந்தத் தொழிலாளி.

நாரதர் யோசித்தார். இந்தத் தொழிலாளி வேதசாஸ்திரங்களையெல்லாம் படிக்கவில்லை என்றால் கூட, அறிவு பூர்வமாகச் சிந்தித்து இறைவனை நம்புகிறான். அதனாலேதான் கடவுள் இந்த ஆளுக்கு சீக்கிரம் முக்தி கிடைக்கும் என்று சொன்னார் என்பதைப்புரிந்து கொண்டார்.

இந்தக் கதையில் வருகின்ற கடவுள்-நாரதர்-வைகுண்டம் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். ஒரு சின்ன விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் தூங்கிக்கொண்டிருக்கிற து உண்மை. அந்தரத்தில் ஆயிரம் கிரகங்கள் சுற்றிக் கொண்டிருப்பது உண்மை. இந்த உண்மைகள் அதிசயமாக நமக்குத் தெரிவதனாலே அதை நம்பாமல் இருந்து விட முடியாது. இயற்கையைப் பரிபூரணமாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே நமது வாழ்வுக்கு ஆதாரம் என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக் கதை .

இந்தக்காலத்தில் நமது பிள்ளைகளுக்கெல்லாம் இது மாதிரி நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது. ஒரு நாள் ஒரு சின்னப் பையனிடம் "ஏனப்பா கடவுள் ஒரு பானைக்குள்ளே ஒரு யானையை நுழைய வைத்து விட்டார் என்று சொன்னால் அதை நீ நம்புவாயா? "என்று கேட்டேன் "நம்புவேன் சார். அது ஒன்றும் பெரிய அதிசயம் இல்லை" என்றான். "எப்படியடா" என்று கேட்டேன். "அந்தப்பானை அந்த யானையை விட பெரிதாக இருந்திருக்கும்" என்கிறான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

## 200ரூபா நோட்டின் ஆயுட் காலம் முடிவு

### மத்திய வங்கி அறிவிப்பு

(கொழும்பு)

1998 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டு இப்பொழுது பக்கத்திலுள்ள 200 ரூபா நோட்டுகள் இனிமேல் அச்சிடப்படமாட்டாதென்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்ற 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கே இந்த பொலிமர் நோட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்தன. குறித்த நிகழ்வொன்றை சிறப்பிப்பதற்கென இது அச்சிடப்பட்டது. இந்த நோட்டுகளின் ஆயுட்காலம் நான்கு வருடங்களாகும். இனிமேல் இவற்றை மத்திய வங்கி அச்சடிக்கமாட்டாது என்று வங்கி மேலும் அறிவித்துள்ளது. (உ)

### டோக்கியோ மாநாட்டில்

## புலிகளின் பிரசன்னத்தை வலியுறுத்துகிறது ஜப்பான்

(கொழும்பு)

எதிர்வரும் யூன் மாதம் 25ஆம் திகதி ஜப்பான் தலை நகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு வெற்றி பெறவேண்டுமானால், அதில் தமிழீழ விடுதலைப்புலிகள் கலந்து கொள்வது அவசியம் என ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற கருத்தரங்கொன்றில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவா சிசரோ ஒட்சுகா கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அக்கருத்தரங்கில் தொடர்ந்து பேசிய ஒட்சுகா,

தமிழீழ விடுதலைப்புலிகள் இம் மாநட்டை பகிஷ்கரிக்கப்போவதாக கடந்தமாதம் அறிவித்திருக்கின்றனர். ஆனாலும் ,அவர்கள் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் எந்த வித தாமதமும் இன்றி மீண்டும் கலந்து கொள்ளுவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காக பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஏனைய அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் அரசாங்கத்தின் இம் முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்கவேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளை கட்டி எழுப்பவும், இலங்கையின் அபிவிருத திகளை விஸ்தரிக்கவும் டோக்கியோ மாநாடு முக்கியமானதாகக் கருதப் படுகிறது.

இம் மாநாட்டுக்கு அரசாங்கமும், தமிழீழவிடுதலைப்புலிகளும் முக்கியமாக கலந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-8)

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு மக்களுக்கான மீள்குடியமர்வுக்கொடுப்பனவை வழங்குவதில் காட்டப்படும் தாமதப் போக்குக் குறித்து சம்பந்தப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மீளக்குடியமர்ந்து ஒரு வருடமாகியும் தமக்குரிய கொடுப்பனவை வழங்காமையால் இயல்பு வாழ்வு திரும்புவது தாமதமடைந்து வருவதாகவும்,

கூரையற்ற வீட்டிலும், இடிந் தழிந்த கட்டடங்களிலும் தொடர்ந் தும் தாம் வாழும் நிர்ப்பந்தம் ஏற் பட்டிருப்பதாகவும் அவர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது இவ்விதம்இருக்க, குடா நாட்டில் மீளக்குடியமர்ந்த 40 ஆயிரம் குடும்பங்கள் மேற்படி கொடுப் பனவுக்கு விண்ணப்பித்தபோதும் முன்னுரிமை அடிப்படையில் 7ஆயிரத்து 968 குடும்பங்கள் கொடுப் பனவை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டன.

இவற்றிலும் 4ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரமே இவற்றை மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய குடும்பங்கள் தமக்குரிய மீள் குடியமர்வுக் கொடுப்பனவு எப்போது கிடைக்கும் என்று அறியாது வாடியிருக்கின்றனர். (உ-4)

## பொது விலை மட்ட அதிகரிப்பு வேகம் இவ்வாண்டு குறைவு

(கொழும்பு)

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் பொது விலை மட்ட அதிகரிப்பு வேகம் குறைந்துள்ளது என பிரதி நிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த பந்துல குணவர்த்தன ,கடந்த 2001 2002ஆம்ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பண வீக்கமும் பெருமளவில் குறைந்துள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு 14.2 வீதமாக காணப்பட்ட பண வீக்கம்2002ஆம் ஆண்டு 9.6 வீதமாக குறைவடைந்தது. இந்த வருடம்அது 7.5 வதமாக குறையும் என சுட்டிக்காட்டினார். (உ-8)

### இராசி பலன்

01.05.2003

(சித்திரை 18,வியாழன்)

அமாவாசை மாலை.6.15 வரை

அச்சுவினி மு.ப.11-12வரை

இராகுகாலம் 01 .27- 2.57

சுபநேரம் 7.27-8.57

அமாவாசை விரதம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு,கற்பனை மிகுதி, விருந்துபசாரம், நல்ல முயற்சி.

**இடபம்**
சயனசுகக் குறைவு,கோபப்படுதல்,எடுத்த காரியம்தாமதமாகும்,அதிக செலவு.

**மிதுனம்**
நினைத்தகாரியம் கைகூடும்,வருமானம் அதிகரிக்கும்,உறவினர்வருகை, கௌரவமான நிலை.

**கடகம்**
பிறர் உதவிசெய்தல் ,நல்ல சம்பவம், அதிகபிரயாசை,முயற்சி கைகூடும்.

**சிங்கம்**
தர்மம்,புதிய முயற்சி ,கட்டுப்படுதல், திடீர் பயணம்.

**கன்னி**
பெரியோரால் அவமதிப்பு,காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு,பிரயாணபயம்.

**துலாம்**
இல்லற நன்மை,காரியம் கைகூடும், கௌரவம்,தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், இலட்சுமிகரமான நிலை,சத்துரு ஜெயம், உடல் நலம்.

**தனுசு**
கொடுக்கல் வாங்கல் பிணக்கு, காரிய தாமதம், அதிகவார்த்தை,தொழில் கஷ்டம்.

**மகரம்**
தாய்வழி உறவினர் சந்திப்பு, எடுத்த கருமங்கள் தாமதமாகலாம், மனச்சஞ்சலம், போசன சுகம்.

**கும்பம்**
அன்னியர் சந்திப்பு,சகோதரரால் உதவி, வருமானம் அதிகரிக்கும்,மாதர் நட்பு.

**மீனம்**
விதண்டாவாதம், காரியதாமதம் , எதிர் பாராத உதவி கிடைத்தல், அதிக செலவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

### வடக்கு-கிழக்கு

## தேவை மதிப்பீட்டு ஆவணம் அரசு விரைவில் வெளியிடும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கின் தேவைகளை மதிப்பீடு செய்து பல் சமூகத்தவரினாலும் தயாரித்து அரசாங்கத்திடம் வழங்கப்பட்ட தேவை மதிப்பீட்டு ஆவணத்தை வெளியிட விருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சிரான் அமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்டு தயாரித்து அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் வழங்கப்பட்டிருக்கும் இவ் ஆவணம் வடக்கு கிழக்கு தொடர்பான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

தேசிய அபிவிருத்திக்கான முன்னுரிமை ஆவணமான 'ஸ்ரீலங்காவை மீட்போம்' திட்டத்தினுள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளை எவ்வாறு உள்ளடக்கலாம் என்பது பற்றி அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருகிறது.

உள்ளடக்கிய பின்னர் இது எதிர்வரும் ஜூன் மாதம் டோக்கியோவில நடைபெறவுள்ள இலங்கைகது உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை,'ஸ்ரீலங்காவைமீட்போம்' திட்டத்தினுள் இதனை உள்ளடக்குவதற்கு முன்னர்,இது தொடர்பான கருத்துக்களை கொள்கை விருத்தி அமுலாக்கல் அமைச்சுக்கு இம் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும் படி அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (உ)

### 3 மில்லியன் அமெ. டொலர்செலவில்

## யாழில் நான்கு நட்சத்திர விடுதி

(தென்மராட்சி)

மூன்று மில்லியன் அமெரிக்க டொலர் மூலதனத்தில் யாழ்ப் பாணத்தில் 60 அறைகள் மற்றும் வசதிகள் கொண்ட நான்கு நட்சத்திர உல்லாசப்பயணிகள் விடுதி இவ்வருடத்தில் அமைக்கப்படவுள்ளது.

கொழும்பில் உள்ள சனசுமா அபிவிருத்தி லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும் இவ் உல்லாசப் பயண விடுதிக்கு 'பெனின்சுலர் சிற்றி' எனப்பெயர் சூட்டப்படும் எனவும் அறியப்படுகின்றது.

தென்பகுதிக்கு வருகை தரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை குடாநாட்டுக்கு வரவழைப்பதில் இவ்விடுதித்திட்டம் பங்களிப்பினை செய்யும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இவவிடுதி அமைக்கும் பணிகள் இவ் வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (உ-77)

## இரண்டாம் மொழிப் பரீட்சை முடிவு வெளியானது

(சுதுமலை)

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட பகுதிகளில் கடமை புரியும் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு நடத்தப்பட்ட இரண்டாம் மொழிக்கான பரீட்சை முடிவுகளை வடக்குக் கிழக்கு மாகாண சபை வெளியிட்டுள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி பரீட்சைக்கு வாய் மூலமாகத் தோற்றிய உத்தியோகத்தர்களுக்கு தனித் தனியே முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் சம்பந்தப் பட்ட உத்தியோகத்தர்களுக்கு மொழிச் சித்திக்கானபடி மாதாந்த சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளதாகவும தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

அஞ்சாமை ஈகைஅறிவூக்கம் இந் நான்கும்
எஞ்சாமைவேந்தர்க்கியல்பு
– குறள்

வலம்புரி

## மே தினம் ஏனோ?

அடக்கப்பட்ட தொழிலாளர்கள் முதலாளித்துவத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து உரிமை பெற்றநாளே மேதினமாகும்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர் வர்க்கம், முதலாளித்துவத்தின் கோரப் பிடியை உடைத்தெறிவதற்காக ஒன்று திரண்டு போராடி உரிமை பெற்ற மேநாளை உலகம் முழுவதும் நினைவு கூருகிறது.

மாணியகால சமுதாய முறைமையில் நிலவிய ஆண்டான் அடிமை முறையின் வக்கிரம் இன்னமும் நீடித்து வரும் வேளையில் மேதினத்தின் அனுட்டிப்பு இப்போது தொழிலாளர் வர்க்கததில் இருந்து கைமாறி முதலாளித்துவ வர்க்கத்திடம் அகப்பட்டு விட்டது.

அமெரிக்காவில் தொழிலாளர் வர்க்கம் புரட்சி புரிந்து பெற்ற உரிமையை இலங்கை வாழ் தமிழர்களும் நினைவு கூருவது என்பது 8 மணித்தியால வேலையில் மட்டும் பொருத்துடையதாக இருக்குமே தவிர, இதர உரிமைகளைப் பொறுத்தவரை குடியிருந்த மனையில் குடியிருக்கவே உரிமையில்லாத தமிழருக்கு மேதினம் தேவைதானா?என்ற கேள்வி எழவே செய்கிறது. விலைவாசி உயர்வுகள்,வறுமையின் காய்வனவுகள்,உருக்குலைந்த உடலங்கள்,இப்படியே ஈழத் தமிழர்களின் சமகால வாழ்வுகள் அமைந்திருக்க,கொட்டி முழக்கும் மேதினங்கள் எதற்காக?அரசியல் வாதிகளை ஆற்றுப்படுத்தவா? ஒலி பெருக்கியின் முன்நின்று கூவிக்குழப்பவா? உள்வழி சென்று உயர் பதவி பெற்று ஏப்பமிடும் தொழிற் சங்கத் தலைமைகள் கூடி நின்று குறூப்போட்டோ எடுக்கவா?

ஓ!தமிழினமே!சிந்திப்பது அவசியம்,சொந்த மண்ணில் குடியிருக்க முடியாதவன்,ஊர்க் கோயிலில் உலாவர உரிமை இல்லாதவன் மேதினம் கொணடாடுவது எவ்வகையில் நியாயமாகும்.

உனக்காக,உன் வறுமைக்காக,உன் பிள்ளை தொழில் பெறுவதற்காக பாடுபட்ட தொழிற் சங்கம் ஏதேனும் உண்டா?சிந்தித்துப்பார். ஆசிரியர் சங்கத்தில் ஆசிரியனுக்குத் தலைமையில்லை, இளைஞர் சங்கத்தில் இளைஞனுக்கு இடமேயில்லை,உழைப்போர் சங்கத்தில் உழைப்போனுக்குத்தொடர்பேயில்லை என்றால் மேதினம் எதற்காக.

ஆம்,சொந்த நிலத்தில் குடியிருக்க முதலில் போராடு, நீ பிறந்த மண்ணில் சுதந்திரத்தோடு வர்ழப்புரட்சிசெய்.

உன் உரிமையை நீயே நிலை நாட்ட வேண்டும்.பல கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்து தத்தம் பிள்ளைகளுக்கு வங்கிகளிலும்,கூட்டுத்தாபனங்களிலும் வேலை பெற்றுக் கொடுத்தவர்கள்,இப்போது உன் உரிமைக்காகப் பாடுபடுவது போல பாசாங்கு செய்கிறார்கள்.

அதோ!அங்கே நிமிர்ந்து பார்.மண்ணின் விடிவுக்காய் தங்கள் உயிரைத் தியாகம் செய்த தியாகிகளின் கல்லறைகள் தெரிகிறது.மேதினத்தில் உன் அஞ்சலியை அங்கே செலுத்து. அந்த மாவீரரின் கனவை நனவாக்க உறுதி கொள்.

# போரைத் தூண்டும் ஜே.வி.பியினர் தமது பிள்ளைகளைச் சண்டைக்கு அனுப்புவரா?

## கல்வி அமைச்சர் கேள்விக்கணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை போர் மூலம் அழித்துவிடலாம் என்று சுயநலப் போக்குடனேயே ஜே.வி.பி. கூறிவருகிறது என்று கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். பலாங்கொடைப் பிரதேச செயலகத்தில் 99-வது கலாசார நிலையத்தை திறந்து வைத்துப் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் உரையாற்றுகையில்;

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவின் பிள்ளைகள் பிரித்தானியாவில் கல்வி கற்றுவருகின்றனர். இந்நிலையில் போரில் ஈடுபட சோமவன்ச தனது பிள்ளைகளை களத்திற்கு அனுப்புவாரா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

புலிகளை போரின் மூலம் இலகுவில் அழித்துவிடலாம் என ஜே.வி.பியினர் கனவு காணுவது வேடிக்கையானது.

போர் ஆரம்பித்தால் அதனால் தமிழர்கள் மட்டும் பாதிக்கப்படப் போவதில்லை.

எமது இனத்தவர்களும் தான் பாதிப்பை எதிர்நோக்குவார்கள். கடந்த கால யுத்தங்களின் போது சுமார் 35 ஆயிரம் உயிர்கள் பலியாகியுள்ளன. ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்களாக உள்ளனர்.

இனியும் யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் தமிழர்களோ புலிகளோ மட்டும் அழியப் போவதில்லை. எமது இளைஞர்களும் இனத்தவர்களும் தான் அழிவார்கள் என்பதை இவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும். அத்துடன் சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமைகள் இங்கு வாழும் ஒவ்வொரு மக்களுக்கும் இருக்கின்றது என்பதை ஜே.வி.பியினர் மறந்து விட்டனரா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-10)

## தேசிய வீரர்களின் சிலைகள் புனரமைப்பு

(கொழும்பு)

சேதமடைந்த நிலையிலுள்ள தேசிய வீரர்களின் சிலைகளை புனரமைப்பதற்கான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு நகரிலும் நகர்ப் புறங்களிலும் இவ்வாறு சேதமடைந்த சிலைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அனகாரிக தர்மபால, சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தேசிய வீரர்களின் சிலைகளே புனரமைக்கப்படவுள்ளதாக கொழும்பு மாகாண சபை உறுப்பினர் ஜெயந்த டீ சில்வா தெரிவித்துள்ளார். (உ-8)

# அரசு-புலிகள் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பமாகும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை விரைவில் மீண்டும் ஆரம்பிக்க முடியுமென அமைச்சரவைப் பேச்சாளரும,அரசாங்கத்தின் சமாதானக் குழுத் தலைவருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று இடம் பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சர் பீரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொள்ளவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருந்ததுடன், இவ்விடயம் தொடர்பாக நோர்வேப் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சந்திப்பதற்கு மறுப்புத தெரிவித்திருந்தார்.

ஆயினும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வேப்பிரதிநிதிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளார்.

இதனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கக் கூடிய வாயபபு ஏறபடடுளளது.

இதேவேளை உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான உபகுழுக் கூட்டங்களை இடை நிறுத்துவதென தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சமாதானச் செயலகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இந்தக் கடிதத்திற்கும் அரச தரப்பில் இருந்து பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் எனவும் அமைச்சர் பீரிஸ் செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## ஆசிரிய நியமனம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 46 பேர் உட்பட 173 பேர் சப்பிரகமுவ மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

5 வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெற்றவர்களாவார்கள்.

ஆசிரியர்களாக நியமனம் பெற்ற 173 பேரில் 63 பேர் தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கடமையாற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த மாதம் 2 கோடி 35 இலட்சம் கிலோகிராம் தேயிலை உற்பததி செய்யப்பட்டதாக இலங்கைத் தேயிலைச் சபை அறிவித்துள்ளது. இதேவேளை கடந்த வருடம் இதே காலப் பகுதிக்கான உற்பத்தி 2 கோடி 48 இலட்சம் கிலோகிராமாகும்.

இதன் அடிப்படையில் கடந்த மாத உற்பத்தி13 இலட்சம் கிலோ கிராமினால் குறைவடைந்துள்ளது.

அதேவேளை,கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையிலான தேயிலை உற்பத்தி 7 கோடியே 15 இலட்சம் கிலோ கிராமாகும்.

சென்ற வருடம் இதேகாலப் பகுதியில் 7 கோடி 21 இலட்சம கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இம் மூன்று மாத காலப்பகுதியிலும் ஒரு சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தேயிலைச் சபை அறிவித்துள்ளது. (உ-8)

## பெறுமதியான முத்திரைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபாலகத்திற்கு 500,1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் பொது மக்கள் இவற்றை இன்றில் இருந்து கொள்வனவு செய்ய முடியுமென பிரதம தபால் அதிபர் அறிவித்துள்ளார். (உ)

## கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)

மேதினத்தை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதலியனகே தெரிவித்துள்ளார்.

பல பகுதிகளில் திடீர் வீதித் தடைகள் மேற் கொள்ளப்படவுள்ளதாகவும்.இதற்காக 5000க்கும் மேற்பட்ட பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-5)



## சாயி அருளமுதம்

ஒரு முடிவை அடைவதற்குரிய மார்க்கமாக இவ்வுலகை உபயோகியுங்கள். இதிலே தரித்து இருப்பதற்கு அவாக் கொள்ளாதீர்கள். உங்கள் உற்பத்தித் தானத்தை நோக்கிச் செல்லும் யாத்திரையில் சிறிது நேரம் ஓய்வெடுக்கும் ‘கரவன்சேரை’யே அது. அகலமாகவும் உறுதியாகவும் கட்டப்பட்ட பாலம் அது. எந்த ஒரு யாத்திரீகனும் தனக்கென அதில் ஒரு வீடு கட்ட முடியுமா? பிரபஞ்சம் க்ஷணத்துக்குக் க்ஷணம் மாறிக்கொண்டிருக்கிறது. பல கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்தாலும் கடந்து சென்ற நிமிடங்களைத் திருப்பிப் பெற முடியாது. கடந்த காலம் எம்முடையதன்று. நிகழ்காலம் எமது பிடியிலிருந்து நழுவிக்கொண்டிருக்கின்றது. எதிர்காலமோ நிச்சயமற்றது. நீங்கள் வெற்றுடம்புடன் இவ்வுலகில் பிறக்கிறீர்கள். இவ்வுலகை விட்டுச் செல்லும் போது இங்கிருப்போர் உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய முகவரியை நீங்கள் விட்டுச் செல்வதில்லை. இப்படியிருந்தும் கூட பாச பந்தங்களை நீங்கள் வளர்க்கிறீர்கள். இதுவே பெரிய மாயை ஆகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## சமாந்தரமாக சைக்கிளில் சவாரி விடுவோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு வீதிகளில் சமாந்தரமாகச் சைக்கிளைச் செலுத்துவோரை சட்டத்தின் முன் நிறுத்துவதில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சில தினங்களாக கடுமையாக அமுல் படுத்தப்பட்டுள்ள இந்த நடவடிக்கையினால் சமாந்தரமாகச் செல்லும் பலர் பொலிஸாரிடம் சிக்கியதுடன் அவர்கள் உடனடியாகவே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தண்டப்பணம் அறவிடப்படுகின்றது.

இதேவேளை,இவ்வாறு சமாந்தரமாச் சென்ற பல சைக்கிள்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சமாந்தரமாக சைக்கிளில் செல்பவர்களினால் குடாநாட்டு வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்து இருப்பது உணரப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதம் இருக்க சமாந்தரமாச சைக்கிளில் சென்ற க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் பொலிஸாரின் கழுகுக் கண்களுக்குத் தப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி குற்றச்சாட்டின் பேரில் நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட 79 பேரிடம் இருந்து தலா ரூபா200 தண்டப்பணம் அறவிடுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.(உ-51,61,4)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நவாலி மகா வித்தியாலயம், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இப்பதவிக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் விண்ணப்பங்களை மே 19-ம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெ.இருதயநாதன் கேட்டுள்ளார். (5)

## பெற்ற குழந்தைக்கு யமனான தந்தை

(கொழும்பு)

தனது ஒரு வயதுக் குழந்தையை நிலத்தில் அடித்து கொலை செய்த நபர் தலை மறைவாகியுள்ள சம்பவம் பலாங்கொடையில் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் மேற்படி நபர் கர்ப்பிணியான தனது மனைவியையும் தாக்கித் துன்புறுத்தியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் குழந்தையை கொலை செய்துவிட்டுத் தப்பியுள்ள தந்தையைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (உ-10)

## போட்டிகள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் ‘‘அஸ்ரா’’ கேடயத்திற்கான யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நாளை நடை பெறவிருந்த 16 வயதுதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டிகள் யாவும் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத் தலைவரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபருமான பி.கமலநாதன் அறிவிக்குள்ளார். (கு-5)

### சமாதானப்...

தலைமைப் பீடம் பிரதமரின் கோரிக்கைக்கு மதிப்பளித்தும், சமாதானத்தைப் புலிகள் குழப்பி விட்டார்கள் என்ற பெயரைத் தகர்த்து,சமாதானத்தின் மீதான தமது பற்றுறுதியை வெளிப்படுத்தும் வகையிலுமே புலிகள் மேற்கண்டவாறு முடிவு செய்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் யப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் புலிகள் கலந்து கொள்வர் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை இவ்வறிவிப்புக் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து உத்தியோக பூர்வமாக தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. (இ)

### தமிழ்த்...

மத்திய கல்லூரியைச் சென்றடையும குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில இருந்தும் மக்கள் யாழ். மத்திய கல்லூரியை வந்தடையவிருக்கின்றனர்.

அங்கு விசேடமாக அமைக்கப்பட்டுள்ள இரண்டு மேடைகளில் நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.தமிழீழ இசைக் குழுவான மட்டக்களப்பு பாடும்மீன் இசைக் குழுவினதும் யாழ்ப்பாணம் சாரங்கா இசைக்குழுவினதும் இன்னிசை கானங்கள்,தமிழீழ விடுதலைப் புலிகள்,அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசேட கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மேதின நிகழ்வில் கலந்துகொள்ளும் பொதுமக்களுக்கான போக்குவரத்து வசதிகள் சகல இடங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.மேதின நிகழ்வை ஒட்டி இன்றைய தினம் வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றைப் பூட்டி ஒத்துழைக்குமாறு ஏற்பாட்டுக குழுவினர் கோரியுள்ளனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தை ஏற்று ஓரணியாகத் திரண்டுள்ள தமிழினம் தனது சுதந்திர வேட்கையை வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய இனம் விடுதலை என்ற ஒரே இலட்சியத்திற்காக ஒன்றுபட்டு நிற்பதை உலக அரங்கிற்கு எடுத்துக் கூறும் வகையிலும் கூட்டு மேதின நிகழ்வுகள் அமையவுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாசைகளையும் விடுதலை வேட்கையையும் மீண்டுமொரு தடவை உரத்து ஒலிக்கச் செய்ய மேதின நிகழ்வில் பொதுமக்களை அணிதிரண்டு பங்கேற்குமாறு மேதின ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (து)

### நோர்வேத்...

காட்டி லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னிக்கு வருகைதருவதற்கு முன்னர் நோர்வேத் தரப்பு உயர் அதிகாரிகளை ஆலோசகர் பாலசிங்கம் சந்திக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் இச்சந்திப்பில் காலதாமதம் ஏறபடலாம் என்றும் இதனாலேயே வன்னி விஜயம் தாமதமாகலாம் என்றும் தெரியவருகிறது. (இ)

# கிழக்கு மாகாணத்தில் உடனடியாக இராணுவ பலத்தை அதிகரிக்குக!

## பாதுகாப்புத் துறைக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ளதுடன அங்கு பொலிசாரினதும், இராணுவத்தினரினதும் பலத்தை அதிகரிக்குமாறு பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கி உள்ளார்.

மூதூரில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்கள் போன்று மீண்டும் இடம்பெறாது தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதற்காக கலகத்தை தடுக்க விசேட படைப் பிரிவு நிறுவப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

மூதூர் சம்பவம் தொடர்பாக ஆராய ஜனாதிபதி மாளிகையில் நடந்த கலந்துரையாடலின்போதே அவர் இந்தப் பணிப்பை விடுத்துள்ளார்.

இதேவேளை திருகோணமலை பிரதேச செயலர் தலைமையில் சகல சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும், குழுக்களின் தலைவர்களையும் உள்ளடக்கும் வண்ணம் விசேட சமாதானக் குழுக்களை ஸ்தாபிப்பது குறித்தும ஜனாதிபதி இச் சந்திப்பில் ஆலோசனை கூறியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-5)

## கணவனையும் மகனையும் மந்திகை வைத்தியசாலையில் பிணமாகக் கண்டேன்

### மிருசுவில் படுகொலை வழக்கில் சாட்சியம்

(கொழும்பு)

மிருசுவில் படுகொலையில் கணவனையும்,மகனையும் ஒரே நாளில் பறிகொடுத்த ஞானச்சந்திரன் பரமேஸ்வரி என்பவர் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளித்தார்.அரச சட்டத்தரணி சரத் ஜயமன்ன குறுக்கு விசாரணை செய்தார்.

பரமேஸ்வரி தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது;2000ஆம் ஆண்டு டிசம்பர் 19-ம் திகதி கணவர் கதிரன் ஞானச்சந்திரனும் மகன் சாந்தனும் விறகு வெட்டுவதற்காகவும்,வீட்டைப்பார்ப்பதற்காகவும் நெல்லியடி அகதி முகாமில் இருந்து சைக்கிளில் சென்றார்கள். ஆனால் அன்று வீடு திரும்பவில்லை.20-ம் திகதி காலை விறகு வெட்டச் சென்ற 9பேரில் 8பேரை இராணுவம் பிடித்து வைத்திருப்பதாகவும் எனது சகோதரரான பொன்னுத்துரை மகேஸ்வரன் தப்பி வந்ததாகவும் எனது தந்தை கூறினார்.

மிருசுவில்,உசன் இராணுவ முகாம்களில் தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை.26-ம் திகதி மந்திகை வைத்தியசாலையில் இருவரையும்பிணமாகக் கண்டேன்.

எனது கணவரும் மகனும் வாரமொரு தடவை விறகு வெட்டுவதற்காகவும்,எமதுவீட்டைப் பார்ப்பதற்காகவும் மிருசுவிலுக்கு செல்வது வழக்கம்.இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் விறகு வெட்டச் சென்ற எண்மர் இராணுவத்தால் சுடப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.பொன்னுத்துரை மகேஸ்வரன் மட்டும் தப்பியிருந்தார். இவரே இவ்வழக்கின் முக்கிய சாட்சியாகவுள்ளார்.இது தொடர்பில் 5 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை ட்ரயல் அற்பார் முறையில் மேல் நீதிமன்ற நீதி அரசர்கள் ஜ.இமாம். சரத் அம்பேபிட்டிய,குமார் ஏகரட்ன ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகின்றது.விசாரணை மே மாதம் 5-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ந)

## உலக வங்கிப் பிரதிநிதி தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளின் புனரமைப்புக் குறித்து பேசப்பட்டது.

அத்துடன் வடக்குக் கிழக்கு புனர்வாழ்வு நிதியம் தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படுவதாக இருந்த போதும் அவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. இச் சந்திப்பில் புலிகளின் பொருளாதார நிபுணர் ஜோய் மகேஸ்வரனும் கலந்து கொண்டார். (இ)

### ஜனாதிபதியின்...

முறைப்பாட்டை அடுத்தே இக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதேவேளை இக் கடிதத்திற்கு பதில் அளித்த யாழ்.படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா;

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் 1993-ம் ஆண்டு பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழேயே நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக விரும்பிய பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப் படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## சுபாஸ்-ஞானம்ஸ் ஹோட்டல் படை முகாம் இடம் மாற்றப்படும்

### இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள படை முகாம்கள் இடம் மாற்றப்பட்டாலும் எத்தகைய நிலைமையையும எதிர் கொள்ளும் ஆற்றல் படையினருக்கு உண்டென்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வட பகுதியின் பாதுகாப்புக் குறித்து சகல விடயங்களையும் பரிசீலனை செய்த பின்னரே சுபாஸ், ஞானம்ஸ் ஹோட்டல்களில் இருக்கும் படையினரின் படை முகாம்களை மாற்றியமைப்பது குறித்து தீர்மானித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ்க்கையில் இயல்பு நிலையை ஏற்படுத்தவே இந்த முடிவை எடுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான முடிவு ஓய்வு பெற்ற இந்திய இராணுவ உயரதிகாரி ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கைக்குப் பின்னரே மேற் கொள்ளப் படுமென்றும் சரத் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

இதேவேளை,யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புத் தொடர்பாக எவ்வித பிரச்சினைகளும் ஏற்படவில்லையென்று அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இது சம்பந்தமாக எடுத்திருக்கும் தீர்மானம் நாட்டின் பாதுகாப்பிற்கு எந்த வகையிலும் பாதுகாப்பற்றதாக அமையாது எனவும் அவர் மேலும் கூறினார். (ஓ-5)

## வவுனியாவிலும் மேதின நிகழ்வு

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு,தொழிற் சங்கங்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இணைந்து மேதினக் கொண்டாட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

ஐந்து இடங்களில் இருந்து ஊர்வலங்கள் புறப்பட்டு வவுனியா நகர சபை மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு விழாக்குழுத் தலைவர் எஸ்.குலதேவராஜா தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

'சமாதானத்தின் முக்கியத்துவம்' எனும் பொருளில் நடை பெறவுள்ள மேதினக் கொண்டாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ளனர். (ந-5)

## கலாசாரப் பெருவிழா

(யாழப்பாணம)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இந்து கலாசார அமைச்சின் ஆதரவுடன் இளங கலைஞர் மன்றத்தில் கலாசாராப் பெரு விழா நடாத்தப்படவுள்ளது.

எதிர் வரும் 8-ம்,9-ம்,10-ம் திகதிகளில் இளங் கலைஞர் மன்றத்தில் மாலை 4மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெறும் இவ்விழாவில் வில்லிசை,இசைக் கச்சேரி,நாட்டிய நாடகம்,பரத நாட்டியம்,நாதஸ்வரக் கச்சேரி, விஷேட சொற்பொழிவுகள்,பட்டிமன்றம்,கவியரங்கம் போன்ற கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகை தரவுள்ள கலைஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

### அமைச்சர்...

இதேவேளை இந்தியாவிலிருந்து சனிக்கிழமை அமைச்சர் நாடுதிரும்புவார் என்றும் அவருடன் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசிஅகாசியும் இலங்கைக்கு வருவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

### கண்காணிப்புக்...

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வன்னிக்கு விஜயம் செய்து அங்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (இ)

### மனவளர்ச்சி...

னர். இச் சம்பவம் தொடர்பாகப் பொதுமக்களால் விடுதலைப் புலிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.இதனைஅடுத்து பிரஸ்தாப நபர்கள் இருவரும் அவர்கள் தொழில் புரியும் நிறுவனத்தின் உதவியுடன் நேற்றுக் காலை பொதுமக்களால் பிடிக்கப்பட்டனர். இவ்வாறு பிடிக்கப்பட்ட நபர்கள் இருவரும் பொது மக்களால் . நையப்புடைக்கப்பட்டு பின்னர் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி;

குடாநாட்டில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் சமூகச் சீர்கேடுகளும் தீய சக்திகளின் தூண்டுதலினால் தலைதூக்கியுள்ளன. இவை தொடர்பாக கிராம மட்டங்களிலும, மற்றும் சமூக அமைக்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம் இததகைய சீர்கேடுகளை கட்டுப்படுத்தும்படி பலமான கோரிக்கை பொது மக்கள் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து தாம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருவதாக கூறியுள்ளார். (த)


இளம் ஓவியக் கலைஞர்களே!

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

வலம்புரி சங்கு நாதம்

தினசரியிலும் வாரமலரிலும்

உங்கள் ஓவியங்கள் இடம்பெற மகத்தான சந்தர்ப்பம். இன்றே வலம்புரி—சங்குநாதத்தின் ஓவியக் கலையகத்தில் உங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள். வலம்புரியில் தினசரி வெளியாகவிருக்கும் காட்டூனில் உங்கள் கற்பனைத் திறனும் இடம்பெற இன்றே உங்கள் விண்ணப்பங்களை:

"ஓவியக் கலையகம்"
வலம்புரி - சங்குநாதம்
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சமகால பிரச்சினைகளைச் சித்தரிக்கும் உங்கள் காட்டூன்களை உடனடியாக வலம்புரிக்கு அனுப்புங்கள்.



உடன் தேவை

கணனி பக்க அமைப்பாளர்கள்
(ஆண், பெண் இருபாலாரும்)

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.